# உளவியல் பிரிவுகள்

## ஒரு பார்வை



க. பரணீதரன்

# உளவியல் பிரிவுகள் ஒரு பார்வை

க.பரணீதரன்

ஜீவநதி வெளியீடு
2015

# உளவியல் பிரிவுகள் ஒரு பார்வை

ஆசிரியர் : க.பரணீதரன்

முதற் பதிப்பு : 2015

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

அட்டைப்பட வடிவமைப்பு : க.பரணீதரன்

வெளியீடு : ஜீவநதி, கலைஅகம், அல்வாய்

பக்கம் : 68

விலை : 200/-

அச்சு : பரணீ அச்சகம், நெல்லியடி

Ulaviyal pirivukal oru parvai

Author : K.Bharaneetharan
First Edition : 2015
Copy Rights : Author
Cover design : K.Bharaneetharan
Publication: Jeevanathy, Kalaiaham, Alvai.
Pages :68
Price : 200/-
Printers : Bharanee Printers, Nelliyady

ஜீவநதி வெளியீடு - 34

# முன்னுரை

உளவியல் மீதான ஈடுபாடு காரணமாகவும் உளவியல் பிரிவுகள் பற்றிய ஆரம்ப அறிவினை பெற்றுக் கொள்ள முனைபவர்களுக்காகவும் இந்நூலை வெளியிடுகின்றேன். இன்றைய மனிதனது வாழ்க்கையில் உளவியலானது அனைத்து வகையிலும் செல்வாக்கு செலுத்துகின்றது. உளவியலை சரியான வகையில் தருணத்திற்கு தகுந்த வகையில் பிரயோகிக்கத் தெரிந்த மனிதன் இன்பமான வாழ்வை வாழ்கின்றான். இந்நூல் உளவியலின் சில பிரிவுகளை மாத்திரமே தன்னகத்தே கொண்டுள்ளது. நீண்ட நாட்களாக இந்நூலை வெளியிட எண்ணியும் நேரமின்மை காரணமாக வெளியிடமுடியாமல் போனது துரதிஷ்டமே. யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரைகளை ஆற்றிய காலத்தில் மாணவர்களுக்கு பயன்படும் வகையில் இந்நூலை வெளியிட எண்ணிய போதும் தற்சமயமே அது கைகூடியிருக்கின்றது. இந்நூல் ஆரம்ப அறிவை அளிக்கும் வகையினதாகவும் இலகு தமிழில் ஆக்கப்பட வேண்டும் என்னும் நோக்கோடு ஆக்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள் கின்றேன். எனக்குள் உளவியல் பற்றிய விருப்பத்தை தம் கற்பித்தல் மூலம் ஏற்படுத்திய என் தந்தை கலாநிதி த.கலாமணி, அருட்திரு இராசேந்திரம் ஸ்ரலின், கு.கௌதமன் ஆகியோருக்கு இந்நூலை சமர்ப்பிக்கின்றேன். மற்றும் இந்நூல் வருகையோடு துணை நின்ற ப.விஷ்ணுவர்த்தினி, தட்டச்சு செய்து உதவிய அ.ராகவேந்திரா ஆகியோருக்கு என் நன்றிகள்.

க.பரணீதரன்

# பொருளடக்கம்


1. உளவியல்

2. குற்ற உளவியல்

3. சிகிச்சை உளவியல்

4. சமூக உளவியல்

5. உடற்கூற்று உளவியல்

6. நுகர்வோர் உளவியல்

7. கடந்த நிலை உளவியல்

8. விருத்தி உளவியல்

9. அறிகை உளவியல்

10. கல்வி உளவியல்

11. நலன்பேண் உளவியல்

# உளவியல்

உளவியல் என்பதைக்குறிக்கும் Psychology என்ற ஆங்கிலப் பதமானது Psyche, Logos ஆகிய இரு சொற்களின் இணைவினால் உருவானதாகும். psyche என்ற சொல் ψνχη என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து பிறந்ததாகும். இக்கிரேக்கச்சொல் "உயிர்மூச்சு" (breath of life) என்ற அர்த்தமுடையது. அதாவது ஆன்மா (soul) ஆவி (Spirit) எனவும் psyche என்ற சொல்லுக்கு அர்த்தம் கூறலாம். இன்னும் எளிமையாகக் கூறின் Psyche என்பது "உள்ளம்" (mind) என அர்த்தப்படுத்திக்கொள்ளலாம். இவ்வாறே Logos என்பதால் குறிக்கப்படும் கிரேக்கச்சொல்லானது அறிவு (knowledge) என்ற பொருளுடையது. அதாவது, ஏனைய இயல்கள் (ologies) போன்று psychology என்பதும் ஒரு வகைக்கற்கையை அல்லது அறிவைக் குறிக்கின்றது. எனவே தான் "ஆன்மா பற்றிய அறிவே அல்லது உள்ளம் பற்றிய அறிவே உளவியல்" என ஆரம்ப காலங்களிலே உளவியல் என்பதற்கு வரைவிலக்கணம் கூறப்பட்டது

"உள்ளம் பற்றிய கற்கையே உளவியல்" என்ற ஆரம்ப கால வரைவிலக்கணத்தை இன்று உளவியலாளர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. பல உளவியலாளர்கள் உளவியல் என்பதை யும் உளவியல் அல்லாததையும் வேறுபடுத்தி அறிவதற்கு முயற்சித்து வந்துள்ளனர். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் படத்தக்க வரைவிலக்கணம் ஒன்றை கொடுப்பதற்காக

உளவியலாளர்கள் மேற்கொண்ட பிரயாசைகளை உளவியல் குறித்த வரலாற்றில் நாம் கண்டு கொள்ளலாம். குழப்பமான சிந்தனைகளைத் தவிர்க்கும் வகையில் உளவியல் என்பதற்கு அறிவியல் ரீதியான வரைவிலக்கணம்" கொடுக்கப்பட வேண்டும் என உளவியலாளர்கள் பலர் இணங்கியராயினும் அறிவியல் ரீதியான வரைவிலக்கணம்" என்ற சொற்றொடர் எதனைக் குறிக்கின்றது என்பது எப்போதும் தெளிவாக இருக்க வில்லை. மனித அனுபவம் குறித்த அறிவியல் ரீதியான கற்கை மீது உளவியல் எப்போதும் கவனம் செலுத்தியது. ஆயினும் மனித அனுபவத்தின் எக்கூறுகள் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்பது குறித்தும் எவ்வாறு அவை ஆய்வு செய்யப் பட வேண்டும் என்பது குறித்தும் சிந்தனை மாற்றங்களும் புதிய புதிய கருத்துக்களும் தோன்றிக் கொண்டே இருந்தன. “உளவியலின் பாடப்பொருள் யாது? உளவியலாளர்கள் என்ன முறைகளைப் பயன்படுத்த வேண்டும்? உளவியலின் இயல்புகள் எவ்வாறு இருக்க வேண்டும்? என்பன போன்ற பல்வேறு வினாக்கள் குறித்தும் ஆரம்பகால உளவியலாளர்கள் சிரமங் களை எதிர்கொண்டனர்.

“உளவியல் என்றால் என்ன?” என நோக்குவதற்கு உளவியலின் வரலாறு பற்றி அறிந்து கொள்ளல் முக்கியமானது. ஏனெனில் இன்றுள்ள உளவியலின் பாடப்பரப்பு மிகவும் பரந்ததாகும். ஒரு தனி மூளைக்கலத்தின் நடத்தை தொடக்கம் மக்கள் குழுக்களின் மனித நடத்தை வரை இப்பாடப்பரப்பின் வீச்சு பரந்துள்ளது.

உளவியல் என்பது மெய்யியலுடனும் உடற்கூற்றிய லுடனும் இணைந்த துறையாகக் கூறப்பட்டது. உளவியலின் தொடக்கத்திகதியை வரையறுத்து கூற முடியாது என்றும் ஒரு தனித்துறையாக உளவியல் பரிணமித்தது ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்குள் தான் என்றும் இன்று கருதப்படுகின்றது. ஏறத்தாழ 120 ஆண்டு காலமாகவே ஒரு முறைசார் விஞ்ஞானப் பாடநெறியாக உளவியல் இருந்து வருகின்றது. உயிரியல் இரசாயனம் போன்ற ஏனைய விஞ்ஞானத் துறைகளுடன்

ஒப்பிடும் போது விஞ்ஞான சமூகத்துக்கு உளவியல் ஒரு புதிய துறையே. ஆனால் பரந்த நோக்கில் பார்க்கும் பொது, மனித நடத்தைகளையும் சிந்தனைகளையும், விளக்குவதற்கு மக்கள் முயன்று வந்துள்ள காலம் வரை உளவியல் இருந்து வந்துள்ளது. எனவே "உளவியலுக்கு ஒரு நீண்ட இறந்தகாலம் உண்டு" என விளங்கிக்கொள்ள முடிகின்றது.

உளவியல் ஆரம்பத்தில் மெய்யியலுடன் இணைந்து நோக்கப்பட்டு வந்தது. ஆயினும் மெய்யியற் சிந்தனைகளில் நிறைந்திருந்த முரண்பாடுகள் உளவியலைத் தனித்துவமான போக்காகக் கடைப்பிடிக்கச் செய்தன. இதன் விளைவாக உளவியலானது விஞ்ஞானக் கற்கை நெறிகளுடன் அதற்கென உரிய சிறப்பியல்புகளுடன் குறிப்பாக பௌதீகவியல், இரசாயனவியல் போன்ற விஞ்ஞான துறைகளுடன் ஒன்றித்துப் போகின்ற சிறப்பியல்புடையதாய் தன்னை அமைத்துக் கொண்டது.

உளவியல் வரலாற்று ரீதியாக எவ்வாறு நோக்கப் பட்டது என்பது முக்கியமான விடயமாகும். புகழ்பூத்த மெய்யிலாளர்கள் பலரும் புலமையாளரும் இன்றும் உளவியலின் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படும் விவகாரங்கள் குறித்துத் தமது கவனத்தைச் செலுத்தி வந்துள்ளனர். உதாரணமாக கிறிஸ்துவின் பிறப்புக்கு 3 நூற்றாண்டுகள் முன்பதாகவே, கிரேக்க மெய்யியலாளரான அரிஸ்டோட்டில் நித்திரை, கனவு, புலன்கள், ஞாபகம், கற்றல் என்பன குறித்து மிக விரிவாக எழுதியுள்ளார். அரிஸ்டோட்டில், பிளற்றோ (Plato) போன்றவர்களின் "ஆன்மா" (De Anima) உள்ளார்ந்த எண்ணங்களை போன்ற கருத்தாக்கங்கள் உளவியலின் வளர்ச்சிக்கு உறுதுணையாயின.

அரிஸ்டோட்டிலும், டேகாட் ஆகியோரும் ஏனைய மெய்யியலாளர்களும், புலமையாளரும் உளவியலை மையப் படுத்திய பல வினாக்களுக்கான அத்திவாரத்தை அல்லது சூழ்நிலைக்காரணிகளின் செல்வாக்கு காரணமாக "போஷப்பா" முக்கியமானது என்ற விவாதம் பல நூற்றாண்டுகளாக இடம்

பெற்று இன்றும் தொடர்கின்றது. இவ்வாறான விவகாரம் இன்றும் தீர்மானிக்கப்படாததாயினும், பல நூற்றாண்டு களுக்கு முற்பட்ட மெய்யியல் வாதங்களும் இன்றைய அறிவியல் ரீதியான வாதங்களுக்குமிடையே முதன்மையான வேறுபாடொன்றுண்டு. குறித்த விவகாரங்கள் சம்பந்தமான மெய்யியல் விவாதங்கள், உற்றுநோக்கல், உள்ளுணர்வு, தர்க்க நியாயிப்பு ஆகியவற்றில் பெரிதும் தங்கியிருந்தன. ஆனால் கருத்துக்களை பரிசீலிப்பதற்கும், ஆதரவளிப்பதற்கும் என சான்றாதாரங்களை ஒழுங்காகச் சேகரித்தலை நவீன உளவியல் வாதங்கள் அடிப்படையாகக்கொண்டுள்ளன.

இருநூறு வருடங்களுக்கு முன்பு செல்வாக்கு மிக்க பல விஞ்ஞானிகள் மனித நடத்தையும், உளத்தொழிற்பாடுகளும் விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்யப்படத்தக்கனவோ என ஐயுறவு கொண்டனர். இதன் பேறாக ஏற்கனவே ஸ்தாபிக்கப் பட்ட விங்ஞான முன்னேற்றத்துடன் குறிப்பாக உடற்கூற்றிய லுடன் இணைப்புடையதாய் உளவியல் உருவானது.

ஏனைய விஞ்ஞானங்களை விட உளவியல் விஞ்ஞான நெறியாக உருவானமைக்கும் காரணம் உடற்கூற்றியல் ஆகும். 1600 களின் தொடக்கத்தில் மனித மூளை, மனித நடத்தை கொண்டுள்ள தொடர்புகளை அறிவதில் உடற்கூற்றியலாளர் கள் நாட்டம் காட்டிகர். பொதுவான உடற்கூற்றியலின் கண்டு பிடிப்புக்கள் உளவியலின் விருத்திக்கு அத்திவாரம் இட்ட தோடு மனித நடத்தையோடும், சிந்தனையோடும் தொடர்பு பட்ட விவகாரங்களுக்கு விஞ்ஞான முறைகள் பிரயோகிக்க லாம் என்ற சிந்தனை உருவாகிறது.

உளவியலின் முறைசார் வரலாற்றை அடையாளம் காண்பதில் 5 உளவியற் சிந்தனா கூடங்கள் (School of Psychology) உதவின. Wilhem Wundt இனால் Leipziq(லீப்சிக்) பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்ட முலாவது ஆய்வுகூடம் மனித மனத்தின் மூலங்களை அகநோக்கு முறை மூலம் பகுப்பாய்வு செய்வதற்கு பயன்பட்டது. Wundt இன் மாணவரான Titchner அமைப்பைக் கண்டறிய நனவு நிலை அனுபவங்களையும்

ஆய்வுக்குட்படுத்தியது. தொழிற்பாட்டு நிலையில் நனவுநிலை அனுபவங்களை தொழிற்பாட்டு வாதத்தின் ஊடாக William James உம், Jhon.B.Watson இனால் நடத்தை வாதமும் உருவாக்கப் பட்டது.

1900 களில் Gestalt (கெஸ்ரல்ட்) உளவியல் முழுமையான அனுபவங்களை ஆராய்ந்தது. Max Wertheimor என்பவர் இதன் ஸ்தாபகர் ஆவார். 20 ஆம் நூற்றாண்டில் முதல் அரைக்கூற்றில் உளப்பகுப்புவாதம் உளவியலில் செல்வாக்கு செலுத்தியது. இச்சிந்தனை கூடம் நனவிலி ஊக்கலுக்கு அழுத்தம் கொடுத்தது.

உளவியல் இன்று பரந்து விரிந்துள்ளது. இன்றைய உளவியல் அணுகுமுறைகளில் மேலும் உயிரியல் கண்ணோட்டம் நடத்தைக்கண்ணோட்டம் என்பன அடையாளப் படுத்தப்படுகின்றது. எனவே உளவியல் என்பதற்கு ஒரு வரைவிலக்கணத்தைக்கொடுப்பது சிரமம் எனினும் "நடத்தை பற்றியும் அறிகைத்தொழிற்பாடுகள் பற்றியதும் உடற்கூற்றியல் செயன்முறைகள் பற்றியதும் ஒரு விஞ்ஞானம் உளவியல் ஆகும்" என இன்றைய உளவியலாளர்கள் வரைவிலக்கணம் கூறியுள்ளார்கள்.

# குற்ற உளவியல்

உளவியலில் குற்ற உளவியலும் ஒன்றாகும். குற்றம் செய்பவனின் மனப்பாங்கு, குற்றத்திற்கான காரணங்கள் ஆகியவற்றை ஆராய்வது குற்ற உளவி யலின் நோக்கமாகும். சமூகம் ஏற்றுக் கொள்ளாது மறுக் கின்ற நடத்தைகள் அனைத்தும் குற்றங்களாகும். அதாவது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொது நெறி முறைகளிலிருந்து பிறழ்ந்து செயற்படுவது குற்றம் ஆகும். குட் கார்ட் என்பவர், "சட்டத் தால் தண்டனை விதித்து தடுக்கப்படும் நடத்தை அல்லது அரசால் தண்டிக்கப்படும் செயல் குற்றம்" என குறிப்பிட்டார்.

ஒருவரது செயல் அல்லது நடத்தை குற்றமாக இனங்காணப்படுவதற்கு, பின்வரும் அம்சங்கள் அதில் அடங்கியிருக்கவேண்டும்:

1) சமுதாயத்திற்கு தீங்கு விளைவிப்பதாய் இருத்தல்
2) அரசால் தடை செய்யப்பட்டதாய் இருத்தல்
3) தண்டனைக்குரியதாய் இருத்தல்

சட்ட ரீதியாக குற்றம் என்பது பின்வருமாறு குறிக்கப்படும்:

குற்றம் = குற்றச் செயல் X குற்றமனம்.

குற்ற நடத்தைக்கான காரணங்கள் பல உள்ளன. அவற்றுட் சில வலுவான காரணங்கள் ஆக பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம்:

- பெற்றோரிடையே அடிக்கடி ஏற்படும் மோதல்கள்
- பிளவு பட்ட குடும்பங்கள்
- அன்பற்ற குடும்பம்
- கட்டுப்பாடற்ற குடும்ப வாழ்க்கை
- வீட்டில் கடுமையான கட்டுப்பாடு
- சிறுவர்களிடம் பாகுபாடு காட்டல்
- வெறுப்புணர்ச்சி
- தீய நட்பு
- பிழையான நடத்தைக்கு வழிகாட்டும் ஊடகங்கள்
- வறுமை
- பிழையான தீர்மானம்

இவை தவிர, பரம்பரை, குற்றத்தையே தொழிலாகக் கொள்ளல், குற்றம் செய்வதற்கு ஏதுவான அமைப்புக் கள் இருத்தல் போன்றவையும் காரணமாகின்றன.

குற்ற நடத்தைக்கு பாரம்பரியமே வலுவான காரண மென பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. XY என்ற உயிரணு வுடன் மற்றொரு லு உயிரணு சேர்ந்து கொள்வதனால் அல்லது xyy என்ற உயிரணுவுடன் மற்றொரு y உயிரணு சேர்வதனால் xyy என்ற உயிர் அணு தோற்றம் பெற்று உருவாகும். இந்த உயிரணுவுக்குரிய குழந்தை வளர்ந்து பெரியவனானதும் குற்ற நடத்தை உடையவன் ஆக இருப்பான் என்பது கண்டறியப்பட் டுள்ளது. மூளைச் சிதைவு, தடைப்பட்ட மூளை வளர்ச்சி போன்றவை இவர்களில் காணப்படும். இவையே குற்ற நடத்தைக்கு காரணங்களாகும். அவர்கள் பிறரைத் தாக்க முயல்வர்.

குற்றம் செய்தலைத் தொழிலாகக் கொண் டோரிடம் மனஅமைப்பில் இத்தகைய நெறிப்பிறழ்வு காணப்படுவ தில்லை. இவர்கள் பொருளாதார காரணங் களுக்காகவே குற்றம் இழைக்கின்றனர். அப்படிப்பட்ட ஒரு குற்றவாளி ஏதேனும் ஒரு குறிப்பிட்ட குற்றத்தில் திறமையும் தேர்ச்சியும் பெற்று, விரைவாகவும் பாதுகாப் பான முறையிலும் பொருள்

ஈட்ட முயற்சிக்கின்றான். பிறரைத் தாக்குவது தன்னைக் காட்டிக் கொடுத்துவிடும் என்பதால் அவன் பிறரைத் தாக்க முயல்வதில்லை. குற்றம் செய்வதற்கு ஏதுவான அமைப்புக் களும் பொருளீட்டும் நோக்கில் பிறரைக் கவர்ந்து அவர்களை குற்றம் செய்யத் தூண்டுகின்றன. சிசெயர்(Cesare), லம்பிறாசோ (Lambreso) போன்ற குற்றவியல் நிபுணர் கள் குற்றவாளிகள் குற்றஇயல்புடனேயே பிறக்கின்றனர் எனக் கூறுகின்றனர். குற்றங்களின் தோற்றத்திற்கு

(1) மனிதத் துன்பம்

(2) வெகுமதிகளை பெரிது படுத்தி மதிப்பிடலும் தண் டனைகளைக் குறைவாக மதிப்பிடலும்

(3) குற்ற விசாரணை, குற்றப்பகுப்புப் பற்றிய அறிவு

என்பவை மூன்று முக்கிய காரணிகள் என டூப் (னுழழடி) என்பவர் குறிப்பிடுகின்றார். மனிதத் துன்பங்கள் கல்வியறி வின்மை, பசி, உளம்பிறழ்ந்த நிலை, கட்டுப் பாடற்ற உணர்ச்சி என்பவற்றால் ஏற்படுகின்றன. குற்ற வாளியின் ஏழ்மையான மனித வாழ்வு அதிகம் சம் பாதிக்க வேண்டுமென்ற பேராசையை ஏற்படுத்தி குற்றங்களினால் ஏற்படக்கூடிய தண்டனைகளைப் பற்றி அவன் அதிகம் சிந்திக்காமல் இருக்கச் செய்து விடுகின் றது. குற்றங்கள் இவ்வாறு தான் கண்டுபிடிக்க இயலும் என்ற அறிவைப் பெற்றுள்ள குற்றவாளி அந்த அறிவைப் பயன்படுத்தி, சட்டத்தை ஏமாற்றி குற்றம் புரிந்து தப்பித்துக்கொள்கிறான்.

தண்டனை ஒன்றின் மூலம் தான் குற்றத்தைத் தடுத்திட லாம் எனப் பலர் இன்று எண்ணுகின்றனர். ஆனால், தண்டனை யானது குற்ற நடத்தையைத் தூண்டி விடவும் கூடும். எனவே குற்றம் இழைத்தலின் காரணத் தையும் அதற்கான சூழ்நிலையை யும் அறிந்து, அவனது நடத்தையால் சமூகத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளை விளங்கிக் கொண்டு, சட்டத்தின் அவசியத்தை எடுத்துக் கூறி, அவனின் மனநிலையை அறிவியல் அடிப்படை யில் திருத்தி சீர்ப்படுத்த வேண்டும். சீர்திருத்தப்பள்ளிகள் இதற்கு உதவும். குற்றவாளிகளைச் சூழவுள்ளோர் தொண்டு

மனப்பான்மையுடன் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

எனவே குற்றவியல் உளவியல் குற்றத்திற்கான காரணத்தையும் சூழலையும் அறிந்து, இவற்றுக்கான விளக்கங் களைக் கொடுத்து, குற்றவாளிகளுக்கு சிகிச்சை அளித்தலையும் அவர்களைச் சீர்திருத்தலை யும் நோக்காகக் கொண்டுள்ளது.

குற்றவியல் உளவியலில் பல்வேறு விடயங்கள் அடங்கி யுள்ளன. அவையாவன:

- உளவியல் கொள்கைகள், அணுகுமுறைகள் என்பவற்றின் பிரயோகங்கள்
- அவற்றின் புரிந்து கொள்ளல்
- விளக்கம் கொடுத்தல்
- எதிர்வு கூறல்
- ஊக்கப்படுத்தல்

குற்ற நடத்தைகளைக் கட்டுப்படுத்த சாட்சிகளின் விசாரணை, காவற்துறை போன்ற குற்றவியல் நீதி அமைப்புக் களின் செயற்பாடுகள் போன்றவையும் குற்ற வியல் உளவியல் ஆராய்கின்றது. கற்றவியல் உளவி யலும் சட்ட உளவியலும் நெருங்கிய தொடர்புடையன.

ஆரம்பகால குற்றவியல் உளவியலின் கருத்துப் படி, குற்றவாளிகள் இயற்கையிலேயே கெட்டவர்கள் அல்லது உளநோயாளிகள் என கருதப்பட்டனர். ஆனால், நவீன குற்றவியல் உளவியலாளர்கள், குற்றங்கள் தனித்து அகச்சக்தி களாலோ அல்லது புறச்சக்திகளாலோ ஏற்படுவதில்லை என நம்பகின்றனர். குற்றங்களுக்க காரணங்களாக, அனுபவங்களை யும் குற்றற் செயன் முறை களையும் முக்கியத்துவப்படுத்தி, சமூக நிபந்தனைகள், உயிரியல் ஏதுக்கள், நனவிலி உந்தல்கள் போன்றவற்றை யும் இவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

குற்றவியல் உளவியலாளர்கள் சிறைக் கைதிகளுக்கு சிகிச்சை அளிக்கவும், அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து முன்னேற்றங்களை மதிப்பிடவும் உதவுகின்றனர். குற்ற நடத்தைக்கான காரணங்கள், பராமரிப்பு, புனர்வாழ்வு, குற்றவாளிகளை அடையாளம் காணல், குற்றவாளிகளைச்

சீர்ப்படுத்தல் என்பன குறித்து குற்றவியல் உளவியலாளர்கள் கல்வி சார் வழிகளில் ஆராய்கின்றனர்.

குற்றங்கள் சமூகத்தில் பெருகினால் சமூகம் சீர் கெடும். குற்றங்களின் தோற்றத்துக்கான காரணிகளை அறிந்து, அவை பற்றிய ஆய்வுகளினூடாக குற்றங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இவ்வகையில் குற்ற நடத்தைக்கான காரணங்களை அறியவும் அவற்றுக்கான தீர்வுகளை அளிக்கவும் குற்றவாளிகளைச் சீர்திருத்தவும் உதவுகின்ற குற்ற உளவியல்முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைகிறது.

# சிகிச்சை உளவியல்

சிகிச்சை உளவியல் (Clinical psychology) என்பது நடத்தைக் குறைபாடுடையவர்களுக்கும் உளக் குலைவு உடையவர் களுக்கும் உதவும் வகையிலான அறிவினதும் திறன்களதும் தொகுதியாகும். உளவியற் பிரச்சினைகளுக்கும் உளக் குலைவுக்கும் காரணங்களை ஆய்ந்தறிந்து அவற்றுக்குப் பரிகாரம் காண்பதை கருத்திற் கொள்கிறது. இந்நிலைமைகளி லிருந்து விடுபட்டு சிறந்த பொருத்தப்பாடடைவதற்கும் சுய வெளிப்பாட்டைக் காட்டுவதற்கும் கூட சிகிச்சை உளவியல் பயன்படுத்தப்படுகின்றது. பிரச்சினைகளை அல்லது உளக்குலைவை ஆய்ந்தறிதல் அவற்றுக்குப் பரிகாரம் காணல் என்பவற்றுடன், இந்நிலைமைகள் ஏற்படாது தவிர்ப்பதையும் ஆய்வுகளை மேற்கொள்ளலையும் சிகிச்சை உளவியல் உள்ளடக்கியுள்ளது.

தொழிற்பாட்டைப் பொறுத்தவரை, பல்வேறு துறை களுடன் சிகிச்சை உளவியல் மேற்பொருந்துகிறது. ஏனைய துறைகளை விட உளமருத்துவத்துடன் (Psychiatry) சிகிச்சை உளவியல் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. உள மருத்துவர்களுக்கான பயிற்சியானது மருத்துவபீடம், பொது வான கட்டுறு பயில்வு, மூன்று வருட வதிவிட உளமருத்துவப் பயிற்சி என்பவற்றை உள்ளடக்கிய வகையில் ஒரு விசேட மருத்துவத் துறையினராக உளமருத்துவர்கள் விளங்கு

கின்றார்கள். ஆயினும். உளமருத்துவர்கள், ஏனைய மருத்துவர் களை விட, சிகிச்சை உளவியலாளருடன் பொதுவான பலவற் றைக் கொண்டுள்ளனர். ஆயினும், சிகிச்சை உளவியலாளர் போலன்றி, உளமருத்துவர்கள் தமது மருத்துவப் பயிற்சி காரணமாக மருந்துகளைப் பயன்படுத்த முடியும். உளமருத்துவ மும் சிகிச்சை உளவியலும் வெவ்வேறு அணுகுமுறைகளைப் பயன்படுத்துகின்ற போதிலும், ஆய்ந்தறிதலும் (diagnosis) பிரதான பரிகார நுட்பமான உளச்சிகிச்சையும் அவை இரண்டுக்கும் பொதுவானவை ஆகும்.

உளமருத்துவமானது நேர்காணல்களையும் உளநிலைப் பரிசீலனைகளையும் பயன்படுத்த முயலும் அதேவேளை உளவியலானது கூடுதலாக புறவயச் சோதனைகளையும் புறத்தேற்ற சாதனங்களையும் (Projective Devices) பயன்படுத்து கின்றது. வருமுன் காத்தல் என்னும் அம்சம் குறித்தே இரு துறைகளும் கவனம் செலுத்த முற்படுகின்றன. உளமருத்துவர் களை விட சிகிச்சை உளவியலாளர்கள் ஆய்வுத்துறையில் அதிக செயலூக்கமுள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள். ஆயினும், ஆய்வு நடவடிக்கைகளில் பங்குபற்றும் உளமருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதற்கான முயற்சி மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. சிகிச்சை உளவியலானது, சமூக சேவையுடன் (Social work) பொதுவாக விளங்கும் அதிக விடயங் களை, குறிப்பாக பரிகாரம் சம்பந்தமாகக் கொண்டுள்ளது. இத்தொழிற்பாடு சம்பந்தமாக சமூக சேவையாளர்களுக்கு (Social workers) சிகிச்சை உளவியலாளர்களைவிடவும் உளமருத்துவர் களை விடவும், சிறப்பான பயிற்சி வழங்கப் படுகின்றது. அடிப்படையான ஒரு ஒழுக் கத்தையோ ஆய்வு அடிப் படையையோ கொண்டிராத பலயீனத்தை அண்மைக் காலங்களில் சமூக சேவை உணரத் தொடங்கியுள்ளது. இந் நிலைமைக்குப் பரிகாரம் காணவும் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. சிகிச்சை உளவியலானது உதவும் வகி பாகத்தை எடுக்கும் போது, குறிப்பாக அதன் சமூக உளவியல் சார் அம்சங்கள் காரணமாக சமூகவியலை அண்மித்திருக்கக்

காணப்படுகிறது. மானிடவியலிலிருந்து சிகிச்சை உளவியல் விலகியே உள்ளது.

உளநோய்க்குறி ஆய்வியல் (Psycho pathology) அசாதாரண உளவியல் (Abnormal psychology) ஒத்த துறைகளின் பெரும் பகுதிகளை சிகிச்சை உளவியல் உள்ளடக்கமாய்க் கொண்டு உள்ளது. குறிப்பாக, ஆளுமைக் கொள்கை. உளப்பகுப்பாய்வுக் கொள்கை என்பவற்றின் கோட்பாடு அடிக்கட்டுமானத்தில் சிகிச்சை உளவியல் தங்கியுள்ளது.

## சிகிச்சை உளவியலின் ஆரம்பம்

உளவியலின் ஏனைய பல கிளைகளைவிட சிகிச்சை உளவியல் அண்மைக்காலத்தில் தோன்றியதாகும். Lightner Witmen என்பவர் முதன்முதலில் Pennsylvanta பல்கலைக்கழகத்தில் உளச்சிகிச்சை நிலையம் ஒன்றை நிறுவியதன் மூலம் 1896 இலிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட வடிவில் சிகிச்சை உளவியல் உருவானது. இது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஒவ்வொரு தனிநோயாளி குறித்த பண்புநிலை சார் ஆய்வை ஆய்ந்தறிதல், சிகிச்சை போன்ற நோக்கங்களுக்காக அவர் வரவேற்றார்.

குழந்தைகளுக்கான மருத்துவமனை- பாடசாலை ஒன்றை நிறுவியதனூடாக பரந்த கவனத்தையும் நீடித்த அவதானத்தையும் பல நோயாளர் (cases) வேண்டிநிற்பதை அவர் அறியத் தந்தார். ஆரம்பத்தில் பின்தங்கிய குழந்தை களையே கவனத்திற் கொண்ட போதிலும், பின்னைய காலங் களில் அதிசிறந்த பிள்ளை, தொழில் வழிகாட்டல், பேச்சாற்ற லின்மை, போன்றவற்றின் பிரச்சினைகளுக்கும் பிரதான இட மளிக்கப்பட்டது. பல்வேறு ஒழுக்கங்களின் ஒன்றி ணைந்த முறையிலான "அணி அணுகு முறை"(team approach) அக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. குறித்த நோயாளர் (Case) சார்ந்த ஆய்வுகளில் (அல்லது தனியாள் ஆய்வுகளில்) மருத்துவர்களும் (குறிப்பாக நரம்பியல் வாதிகளும்) சமூக சேவையாளரும் கூட்டிணைந்து செயற்பட்டனர். வாண்மைப் பயிற்சியின் தேவையை எடுத்துரைத்து, தற்கால சிகிச்சை

நிலையங்களின் (Clinics) பல மூலகங்களை உள்ளடக்கியதான கோலமொன்றை Witmer விருத்தி செய்தார்.

**1909**இல் William Healy என்பார் நடத்தைச் சிகிச்சை நிலையம் ஒன்றை ஆரம்பித்து பிள்ளை வழிகாட்டலைத்(Child Guidance) தொடங்கி வைத்தார். பொதுவாக உளச்சுகாதாரம் சார்ந்த துறையிலும் சிகிச்சை உளவியலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென Healy விழைந்தார். Witmerக்கும் Healyக்கும் இடையே அவர்களின் அணுகுமுறைகளில் வேறு பாடு உண்டு. கல்வி சார்ந்த பிரச்சினைகளில் முக்கியமாக உள நலக் குறைபாடுடையோரின் கல்வி சார்ந்த பிரச்சினைகளில் Witmer கவனம் செலுத்தினார். ஆளுமையின் அறிவாற்றல் சார், அறிகை சார் அம்சங்களில் அவர் கொண்ட அக்கறை, உளநலப் பாதிப்புக்குள்ளானோரின் விடயங்கள் குறித்து பாடசாலைச் சூழமைவில் அல்லது உளநலப் பாதிப்புக்குள்ளானோரின் நிறுவனச் சூழமைவில் கல்வியாளருடன் தொடர்புகளைப் பேண உதவிற்று. மருத்துவப் பிரச்சினையில் நாட்டம் கொண்டு, அதன் உடலியல் சார்/ நரம்பியல் சார் அம்சங்களில் Witmer கவனம் செலுத்தினார். மறுபுறத்தில் Healy என்பவர் ஆளுமையின் எழுச்சி சார் அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். மருத்துவப் பிரச்சினைகளில் உள மருத்துவப் பக்கத்தை அவர் பார்க்கத் தொடங்கி, பல்வேறு சமூக முகவர் களுடனும் நிறுவனங்களுடனும் அவர் தொடர்பு கொண்டார். ஒப்பீட்டு அடிப்படையில் சிகிச்சை உளவியலின் விருத்தியில் Healy இன் அணுகுமுறை Witmer இன் அணுகுமுறையைவிட கூடிய பொருத்தமுடையதாகக் காணப்பட்டது.

## ஆரம்பகால விருத்தி நடவடிக்கைகள்

உளச்சிகிச்சை நிலையங்களின் விருத்திக்குச் சமாந்தர மாக, உளக்குலைவு உடையவர்களுக்காக மருத்துவமனைகளில் உளவியல் ஆய்வு கூடங்கள் நிறுவப்பட்டன. இந்த உளவியல் ஆய்வுகூடங்களில் பரிசோதனைமுறை சேவைகள் மேற் கொள்ளப்பட்டன. அதாவது மருத்துவமனை நடவடிக்கைகள்

சோதனைக் கருவிகளை தாராளமாக உபயோகிப்பதை ஊக்கு வித்தது. சிகிச்சை உளவியில் ஆரம்ப நாட்களிலிருந்து American Psychological Association(APA) இத்துறை சார் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டது. 1895இலிருந்து உளச்சோதனைகளை நியமப்படுத்துவதில் இது நாட்டம் காட்டியது. 1915 இல் உளப் பரிசீலனையாளர்களின் தகைமை கள் பற்றிய ஆய்வொன்று தொடங்கப்பட்டது. 1918இல் இப்பரிசீலனையாளர்களுக்கு அத்தாட்சிப்பத்திரம் (certification) வழங்குதல் தொடர்பாக பரிசீலிப்பதற்கு குழுவொன்று நிய மிக்கப்பட்டது. 1920 இல் இவ்வாறு அத்தாட்சிப்பத்திரம் வழங்குவதற்கான குழு நியமிக்கப்பட்டது. 1923 இல் 25பேர் மட்டுமே விண்ணப்பித்தனர். 1927 இல் இது இடைநிறுத்தப் பட்டு, மீண்டும் 1947 இல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

1930களில், சிகிச்சை உளவியல் விவகாரங்களைக் கையாள்வதற்கான ஒழுங்கான பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. பல்கலைக்கழகங்களும் அரசும் தேசிய நிறுவனங் களும் இணைந்து, பயிற்சி, அனுபவம் என்பவற்றுக்கான நியமங்களை வகுப்பதற்கு முயற்சித்துள்ளன.

1940 களில் கணிசமான அளவு சிகிச்சை உளவியல் நடவடிக்கைகள் சமுதாயங்களிலும், மருத்துவமனைகளிலும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் முறையான பயிற்சியற்றவர் களாலேயே பயிற்சியுடன் தொடர்புடைய பல பிரச்சினைகள் கையாளப்பட்டன. பயிற்சிகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்த சிரத்தை காணப்பட்ட போதிலும் ஒரு சில நிகழ்ச்சித் திட்டங்களே ஒழுங்கு செய்யப்பட்டன. ஆனாலும் எந்தப் பின்னணியிலும் சிகிச்சை உளவியலாளரின் சொந்த தீர்மானமே எடுக்கப்பட்டது. பல்கலைக்கழகத்திலிருந்தோ அல்லது ஏனைய நிறுவனங்களிலிருந்தோ வெளிக்கிளம்பிய எந்த நிகழ்ச்சித்திட்டமும் சிகிச்சை உளவியலாளரின் பயிற்சியில் செல்வாக்குச் செலுத்தவில்லை.

## அண்மைக்கால விருத்தி

1940களிலிருந்து சிகிச்சை உளவியல் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து சிந்திக்கப்பட்டது. உளவியலிலோ அல்லது உளவியலுக்கு அப்பாலோ உள்ள பல்வேறு வகைச் சக்திகள் காரணமாக சிகிச்சை உளவியலானது அதனைத் தொழிலாகப் பயில்வோரிடம் மூன்று முக்கியமான பணிகள் குறித்த தேர்ச்சிகளை எதிர்பார்த்தது.

1) ஆய்ந்தறிதல் (Diagnosis) அல்லது சோதனைகள், அளவீடுகள், நியம நேர்முகங்கள் மற்றும் ஒத்த செய்முறைகளின் பயன்பாட்டினூடாக உளவியல் நிபந்தனைகளின் உற்பத்தி பற்றியும் இயல்பு பற்றியும் அறிவைப் பெறல்.

2) ஆய்வு (Research) அல்லது கட்டுப்படுத்தப்படக் கூடியதும் பரிசோதனை ரீதியாகத் தீர்வுகாணக் கூடியதுமான குறித்த பிரச்சினைகளை ஆய்வு கூடத்திலோ அல்லது குறித்த பின்னணியிலோ ஒழுங்கான முறையில் ஆய்வுக்குட்படுத்தி பெற்றுக் கொண்ட முன்னேற்றமான அறிவு.

3) சிகிச்சை (Therapy) அல்லது வாடிக்கையாளர்களின் (Clients) நிலைமைகளை மேம்படுத்தல் தொடர்பான சிக்கலான கலையும் விஞ்ஞானமும்.

1960 களில் ஆய்ந்தறிதல், ஆய்வு, சிகிச்சை ஆகிய இம்மூன்று பணிகள் குறித்த தேர்ச்சிகளுக்காக, சிகிச்சை உளவியலில் காலநிதிப்பட்டப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இப்பட்டப்படிப்பு ஒரு வருடம் கட்டுறு பயில்வுப் பயிற்சியையும் (Internship) உள்ளடக்கியதாக 4 வருடங்களைக் கொண்டது. கொள்கை சார்ந்ததும் சிகிச்சை சார்ந்ததும் இயக்கமுள்ளதுமான உளவியல் சார் அடிப்படைப் பாட நெறிகளினூடாக, செய்முறை, எழுத்து, கட்டுறுபயில்வு என்பவை ஒழுங்கு செய்யப்பட்டன. இப்பொழுது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்ற பயிற்சித் திட்டம், 1947இல் அமெரிக்க உளவியற் கழகத்தின் (American Psychological Association) பயிற்சிக் குழுசினால் அதனது அறிக்கை யில் முன் வைக்கப்பட்ட ஒன்றாகும். APA இன் 1947ஆம்

ஆண்டின் அறிக்கையானது சிகிச்சை உளவியலாளர்களுக்கான சிகிச்சைப் பயிற்சி பல்கலைக்கழகங்களில் உள்ள துறைகளை மையமாகக் கொண்டு பல்கலைக்கழக நிகழ்ச்சித் திட்டங் களுடன் ஒன்றிணைந்த வகையில் மேற் கொள்ளப்படலாம் என எடுத்துக்கூறியது. சிகிச்சை உளவியலுக்கான சிறப்பான வாண்மைத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட வேண்டும் என முன் மொழிவுகள் எழுந்தபோதிலும், ஏற்கெனவே உள்ள பல்கலைக் கழகங்களில் உள்ள உளவியற்துறைகளை சிகிச்சை உளவியலின் தேவைகளை நிறைவேற்றக் கூடியதாக விரிவுபடுத்துவதே பொருத்தமானது என்ற தீர்வே இவ்விடயத்தில் பெரிதும் ஆதரிக்கப்பட்டது. இத்திட்டமானது சிகிச்சை உளவிய லாளரை அறிவியல் வாண்மையாளராகக் கொள்வதைக் குறைத்து மதிப்பிடுவதோடு, "ஒரு சிகிச்சை உளவியலாளர் முதலில் ஓர் உளவியலாளர் இரண்டாவதாகவே அவர் ஒரு சிகிச்சையாளர்" என்ற மகுட வாசகத்தை ஆதரிப்பதும் ஆகும். உளவியலாளரின் வாண்மை பற்றிய உணர்வு கட்டியெழுப்பப் பட்டதோடு, பல்கலைக்கழகங்களும் வெளிக் கள நிலையங் களும் (field centres) சிகிச்சை உளவியலிற் சேவைக்கு வேண்டிய பொருத்தமான ஆளுமை இயல்புகள், உயர் அறிவாற்றல் திறன் கள் என்பவற்றின் முக்கியத்துவத்தை உணரத் தொடங்கின.

அண்மைக் காலங்களில், அமெரிக்க உளவியற் கழகமானது(APA), சிகிச்சை உளவியலில் பயிற்சிகளையும் நடைமுறையையும் மதிப்பீடு செய்வதற்கான நியமங்களை ஏற்படுத்துவதில் அதிக அக்கறை காட்டியுள்ளது. சிகிச்சை உளவியலின் உயர்தரங்களை உறுதி செய்து கொள்வதற்காக American Board of Examiners in Professional Psychology என்ற அமைப்பு 1947 இல் ஒழுங்கமைக்கப்பட்டது. இன்று பல்வேறு நாடுகளி லும் சிகிச்சை உளவியல் (clinical psychology) முன்னேறி வரு கின்றது. நாட்டுக்கு நாடு பயிற்சி நெறிகளிலும் சிறு சிறு வேறு பாடுகள் காணப்பட்டாலும், சிகிச்சை உளவியலை ஒரு வாண்மையாகப் பேணுவதற்கான முயற்சிகளே காணப்படு கின்றன. சிகிச்சை உளவியல் சமூகத்திற்கான பங்களிப்பை நல்கி

ஒரு வாண்மையாக விளங்க வேண்டுமானால் உளவியலும் சிகிச்சை உளவியலும் பல பிரதான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். ஆய்வுக்கான பயிற்சி, பிரயோகம், ஆய்வுக்கும் அனுஷ்டானதிற்கான பரப்புகள், பல்கலைக்கழக பயிற்சித் திட்டங்கள், மதிப்பீடும், சீரமைத்தலும், ஆய்வையும் அனுஷ்டானத்தையும் உயர்தரத்தில் பேணல் என பல்வேறு பிரிவுகளிலும் பல விவகாரங்களையும் பிரச்சினைகளையும் சிகிச்சை உளவியல் எதிர்நோக்குகிறது.

சிகிச்சை உளவியலாளர்கள் இன்று பல்வேறுபட்ட துறையினருடன் இணைந்து செயற்படுகிறார். Psychiatrists, Geriatrician, Paediatricians, Psycho therapists போன்ற பல்வேறு உள நலம் பேணும் வாண்மையாளருடனும் இணைந்து கூட்டாக சிகிச்சை உளவியலாளர்கள் தொழிற்படுகின்றார்கள்.

முதலில் ஒரு நோயாளியை மதிப்பிடுவதில் சிகிச்சை உளவியலாளர் உதவுவார். உதாரணமாக மூளையில் காயத்தால் பாதிக்கப்பட்ட ஒருவரைப் பல்வேறு சோதனைகளுக்குட் படுத்தி பரிசீலித்து அவரால் செய்ய முடியாத காரியங்களை இனங்கண்டு அவற்றை மீண்டும் ஆற்றுவதற்கு ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார். அடுத்து நோயாளருக்கான சிகிச்சைகளிலும் ஈடுபடுவார். இச்சிகிச்சை பல்வேறு உளவியற் கோட்பாட்டுச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க லாம். மூன்றாவதாக ஆய்வு நடவடிக்கைகளிலும் சிகிச்சை உளவியலாளர் ஈடுபடுகின்றார்கள்.

எனவே இன்று சிகிச்சை உளவியலானது மதிப்பிடுதல், ஆய்ந்தறிதல், சிகிச்சை, முற்பாதுகாப்பு என்பவற்றை உள்ள டக்கிய வகையிலும், ஏனைய உள மருத்துவத் துறைகளோடு ஒத்ததான வாண்மைத்துவ பயிற்சிகளையும் பட்டங்களையும் உள்ளடக்கிய வகையிலும் சிகிச்சை உளவியலானது, உளவி யலை மருத்துவ ரீதியான கற்கை நெறிக்கு இட்டுச் செல்கின்றது என்றே கூறலாம். பிரித்தானிய நாடுகளில் "சிகிச்சை உளவியல்" என்பதற்குப் பதிலாக பல சந்தர்ப்பங்களில் "மருத்துவ உளவியல்" (Medical Psychology) என்ற பதமே பயன்படுத்தப்படு வதும் இதற்கான ஒரு சான்றாகும்.

க.பரணீதரன்

# சமூக உளவியல்

சமூக உளவியல் என்பது சமூகச் சூழலில் மக்கள் எவ்வாறு சிந்திக்கிறார்கள், உணர்கிறார்கள், நடந்து கொள் கிறார்கள் என்பவற்றைக்குறித்த விஞ்ஞான பூர்வமான கற்கை ஆகும் என வரைவிலக்கணம் கூறலாம்.

நமது வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் சுகம் அனைத்தையும் அநேக சந்தர்ப்பங்களில் பிறரே நிர்ணயித்துக் கொள்கின்றார்கள். பிறரைப் பற்றியோ அல்லது நம்மைப் பற்றியோ நாம் சிந்திப்பது தான் நமது நடத்தையைத் தீர்மானிக் கின்றது. அவ்வாறே, சமூகச் சூழலும் நமது நடத்தையைப் பாதிக்கின்றது. சமூக நடத்தையானது நமது உணர்தலாலும் சமூகக் கோட்பாடுகளினாலும் உந்தப்படுகின்றது. எனவே, சமூக உளவியல் என்பது சமூக நடத்தை மற்றும் எண்ணங்களை அறிவியல் சார்ந்து விளங்கிக் கொள்ளல் ஆகும். அதாவது, தனி மனிதனின் நடத்தை, அநுபவம் ஆகியவை மற்றவர்களுடன் இணையும்போதோ, குழுக்கள், கழகங்கள் போன்றவற்றைச் சார்ந்திருக்கும்போதோ அத்தனிமனிதனின் நடத்தையில் ஏற்படும் மாற்றங்களை அறிவியல் முறையில் ஆராய்வது சமூக உளவியல் ஆகும். அத்தோடு, தனி மனிதனின் நினைவும் உணர்வும் எவ்வாறு "மற்றவர்களின் முன்னிலை"யில் பாதிக்கப் படுகின்றன என்பதைப் புரிந்து கொண்டு விளக்கமாக அது எடுத்துரைக் கின்றது. இங்கு மற்றவர்களின் முன்னிலை என்பது

புறச்சூழ்நிலையாகவோ அகச்சூழ்நிலையாகவோ இருக்கலாம்.

சமூக உளவியல் மனிதர்களைப்பற்றி மட்டுமே ஆராய்கின்றது. குழுக்களைப் பற்றி அது ஆராய்கையில், அச்சூழலிலுள்ள ஒவ்வொரு தனிநபரைப் பற்றியும் கவனம் செலுத்துகின்றது. மனிதர்கள் எப்படி மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்கின்றார்கள், உணர்கின்றார்கள், அவர்களுடன் உறவு கொள்கிறார்கள், மற்றவர்கள் மீது எவ்வாறு தாக்கம் ஏற்படுத்துகின்றனர் என்பனவற்றை எல்லாம் சமூக உளவியல் ஆராய்கின்றது.

ஒருவரது சமூக நடத்தையை (அதாவது உணர்ச்சி, செயல்கள் மற்றும் சமூகச் சூழலில் ஒருவருக்கு ஏற்படும் எண்ணங்கள்) பல்வேறு காரணிகள் தீர்மானிக்கின்றன. இக்காரணிகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்:

1. மற்றவர்களுடைய நடத்தை மற்றும் இயல்புகள் (அவர்கள் என்ன சொல்கிறார்கள், செய்கிறார்கள், அவர்களுடைய தோற்றம் போன்றவை.)
2. சமூக சிந்தனைகள் (நமது எண்ணங்கள், நம்பிக்கைகள், ஞாபகங்கள் போன்றவை)
3. சுற்றுப்புறக் காரணிகள் (வெப்பம், சத்தம், மாசுபடுதல், கூட்டம், வானிலை போன்றவை)
4. சமூக கலாசாரக்காரணிகள் (குழு அங்கத்தினர் விதி முறைகள், மதிப்புகள்)
5. உடற் கூற்றுக் காரணிகள் (மூதாதையர்களிடமிருந்து பெற்றுள்ள தோற்றம்)

எனவே, இவற்றின் அடிப்படையில் நோக்கும் போது, சமூக உளவியல் என்பது ஒரு தனிநபருடைய அனுபவம் மற்றும் நடத்தைகள் என்பன மற்ற நபர்களுக்கேற்ப, குழுவிற்கு ஏற்ப, மற்றும் கலாசாரத்திற்கு ஏற்ப எவ்வாறு உள்ளன என்பதை அறிவியல் ரீதியாக ஆராய்ந்தறிவதே ஆகும்.

## சமூக உளவியலின் வரலாறு

சமூக உளவியல் எப்போது தோன்றியது எனத் திட்ட வட்டமாக ஆராய்வது எளிதன்று. குறியீடுகள், அடையாளங்கள், சைகைகள் ஆகியவற்றின் வழியே மனிதன் தன் மனக்கிடக்கையை மற்றவர்களுக்கு உணர்த்திய போதே, அதாவது மொழி என ஒன்று தோன்றுவதற்கு முன்பே சமூகம் எனும் அமைப்பு தோன்றியது எனலாம். ஆங்கே சமூக நடத்தைகள் துளிர்க்கத் தொடங்கி ஒருவரை ஒருவர் அறிந்து, புரிந்து கொண்டு, தொடர்பாடல் கொண்டு வாழத் தொடங்கிய போதே சமூக உளவியலும் தோன்றியது எனலாம். எனவே சமூக உளவியலின் வரலாற்றை ஆராயுமிடத்துப் பொதுவாக ஒரு குறிப்பிட்ட நிலையிலோ குறிப்பிட்ட ஒருவரிடமோ தொடங்கியதாக சொல்லமுடியாது.

உளவியல் என்பது மனிதன் நடத்தை பற்றி ஆராயும் அறிவியல் ஆகும். ஆதிகால மனிதனும் சமூகமாய் வாழ்ந்தான். எனினும் இப்போதைய சமூக அமைப்பு அப்போது இல்லை. இக்கால சமூக நடத்தையைப் பற்றிப் பயில்வதே சமூக உளவியலாகும். மனிதனின் புற வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு நாம் தீர்வுகளைக் கண்டுள்ளோம். அதாவது, மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெற முயன்று வெற்றிகண்டுள்ளோம். ஆனால் அவனது அக வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு அவன் தன்னைச் சார்ந்துள்ள சமூகத்தோடு ஒன்றி வாழும்போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு நாம் இதுவரை முடிவான ஒரு தீர்வினைப் பெற வில்லை. எனவே தனியாள் வாழ்க்கையில் சிறக்க அவனுக்குச் சமூகம் பற்றிய அறிவு மிகவும் தேவை. இதற்குச் சமூக உளவியல் உதவுகிறது. சமூக உளவியல், பிளேட்டோ முதல் பென்தாம் வரையிருந்த அரசியல் தத்துவச் சிந்தனையாளர்களின் சிந்தனைகளின் வழித் தோன்றியது எனலாம். இருப்பினும் முதலாம் உலகப் போரின் விளைவாக எழுந்த பிரச்சினைகளே சமூக உளவியல் தோன்ற அடிப்படைக் காரணங்களாய் அமைந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அகஸ்டே காம்டே சமூக

உளவியலை ஒரு புத்தகமாக எழுதத் தொடங்கினார். வில்ஹெம் வூண்ட், சார்லஸ் டார்வின், ஹெர்பர்ட் ஸ்பென்சர், வில்லியம் மக்டூகல் போன்றோர் பத்திரிகைகளிலும் நூல்களிலும் சமூக உளவியலைப் பற்றி எழுதினர். 1924 ஆம் ஆண்டில் ஆல்போர்ட் என்பவர் எழுதிய சமூக உளவியல் என்ற நூலின் காலத்திலிருந்தே சமூக உளவியலின் புதுமைக் காலம் தோன்றியது என்பர்.

**சமூக உளவியலின் இயல்புகள்**

*1. சமூக உளவியல் என்பது ஓர் அறிவியல் ஆகும்.*

- சமூக உளவியல் ஒரு விஞ்ஞானம் அல்லது அறிவியல் என்ற வகையில் அது அறிவியல் முறைப்படி மனித நடத்தைகளை ஆராய்கின்றது. சமூக உளவியலில் பின்பற்றப்படும் பின்வரும் நடைமுறைகள் விஞ்ஞான பூர்வமானவை.

அ) சமூக உளவியல் மதிப்புக்களைப் பற்றி ஆராயாமல் உண்மைகளைப் பற்றி ஆராய்தல். இதனால் முடிவுகள் அனைத்தும் பாரபட்சம் இல்லாமலும் வேற்றுமை இல்லாமலும் இருக்கும்.

ஆ) அறிவியல் சார்ந்த வழிமுறைகளைப் பின்பற்றுதல். சமூக உளவியலில் விஞ்ஞானம் சார்ந்த பல்வேறு ஆராய்ச்சிமுறைகள், (குறிப்பாக வினாக்கொத்து, நேர்காணல், சமூக அளவீடு) போன்றவை பயன் படுத்தப்படுகின்றன.

இ) சமூக உளவிலின் சட்டதிட்டங்கள் அனைத்தும் உலகப் பொதுவானவையாக விளங்குதல்.

ஈ) சமூக உளவியல், காரண காரியத் தொடர்புகளை ஆராய்ந்து மனித நடத்தைகளை எதிர்வு கூறல்.

உ) சமூக உளவியலானது, விஞ்ஞானத்தின் பெறு மானங்களான துல்லியத்தன்மை (accuracy) புற வயத்தன்மை(objectivity), ஐய வாதம்(skepticism), திறந்த தன்மை(openness) என்பவற்றைப் பேணிக் கொள்கின்றது.

*2.* சமூக உளவியல் என்பது மனிதனின் தனித்துவத்தையும் சமூக அந்தஸ்தையும் விளக்குவதாகும்.

- மனித வாழ்வின் முக்கியத்துவம் சமூகத் தன்மை யாகும். மக்கள் செயல்களைக் கூடிச் செய்கிறார்கள், கூடி வாழ் கிறார்கள், அவர்களுடைய அனுபவங்களையும் சந்தோஷங் களையும் கவலைகளையும் இலட்சியங்களையும் மனமுறிவு களையும் பகிர்ந்து கொள்கிறார்கள். ஒவ்வொருவரிடமிருந்தும் கற்றுக் கொள்வதோடு மட்டுமல்லாமல், நம்பிக்கைகள் எண்ணங்கள், கலாசாரம் ஆகியவற்றை மாற்றிக் கொள்ளவும் செய்கிறார்கள். இருந்த போதும் ஒவ்வொரு மனிதனும் தனித்துவமானவன். எந்த ஒரு கோட்பாடும் விளக்கங்களும் மனிதனின் நடத்தையை முழுமையாகக் கூற முடியாது. சமூக உளவியல் மனித வாழ்வை ஒரு சமூகப் பகுதியாக நம்புகின்றது. மனிதனின் பல்வேறு சமூகப் பிரச்சினைகளையும் மனிதனையும் அறிய முயற்சிக் கின்றது.

*3.* சமூக உளவியல். மனிதனின் சமூக இடைவினைகளை (Social Interactions) விளக்குகின்றது.

- இடைவினை என்பது இரு மனிதர்களுக்கிடையே நடக்கும் செயல்களைப் பார்த்து அறியக்கூடிய நடத்தையைக் குறிப்பதாகும். ஒருவன் பிறருடன் இடை வினையுறும் முறைகள், இடைவினையால் ஏற்படும் தாக்கங்கள், விளைவுகள் என்பன சமூக உளவியலில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். சமூக உளவியல் இந்த ஆளிடை சார்ந்த இடைவினைகளுக்கும் நடத்தைகளுக்கும் (Interpersonal interactions & behaviours) விளக்க மளிக்க முயல்கின்றது.

*4.* சமூக உளவியலானது சமூக நடத்தை மற்றும் சிந்தனைக்கான காரணிகளைப் புரிந்து கொள்கிறது.

- "சமூக உளவியலாளர் சமூக நடத்தை மற்றும் சிந்தனையை அமைக்கின்ற நிபந்தனைகளையும் காரணிகளை யும் விளக்க முயல்கின்றனர்" என்ற கூற்று பல உட்பொருட்

களைக் கொண்டுள்ளது. சமூக நடத்தையோடு தொடர்புடையனவையாக மக்களின் செயல்கள், உணர்வுகள், நம்பிக்கைகள், ஞாபகம், அனுமானம் போன்றவை கருதப்படுகின்றன. பல்வேறுபட்ட மாறிகள் இவ்விடயத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒருவரின் அறிகைச்செயன்முறைகள் (Cognitive processes), சூழல் சார்மாறிகள், கலாசாரக் காரணிகள், உயிரியற் காரணிகள் என பல்வேறு வகை யான காரணிகள் சமூக நடத்தையிலும் சிந்தனையிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவற்றை எல்லாம் அறிந்து கொண்டு உளவியல் விளக்க முயல்கிறது.

5. சமூக உளவியலானது மனித நடத்தைகளையும் சிந்தனைகளையும் விளக்குவதற்குப் பல்வேறு கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் பயன்படுத்துகின்றது.

- சமூக உளவியலில் பயன்படுத்தப்படும் கொள்கைகளாகப் பின்வருவனவற்றைப் பட்டியலிடலாம்:

அ) நடத்தைக் கொள்கை (Behavioural Theory)
ஆ) அறிகைக் கொள்கை (Cognitive Theory)
இ) முழுமைக் (கெஸ்ரோல்ட்) கொள்கையும் களக் கொள்கையும் (Gestalt and Field Theory)
ஈ) சமூகப் பரிமாற்றக் கொள்கை (Social Exchange Theory)
உ) குறியீட்டு இடைவினை வாதம் (Symbolic Interactionism)
ஊ) வகிபாகக் கொள்கை (Role Theory)

சமூக உளவியலில் பயன்படுத்தப்படும் முறைகளாக அல்லது அணுகுமுறைகளாக அளவை(Survey), பரிசோதனை (Experiment), அவதானித்தல்(Observation) முதலியவற்றை குறிப்பிடலாம்.

## சமூக உளவியலின் நோக்கம்

*1.* சமூக உளவியலானது சமூக நடத்தையின் தன்மைகளை அறியாத நோக்கமாகக் கொண்டது.

- சமூக நடத்தையானது நான்கு அடிப்படை அக எதிரியக்கத்தை(reactions) அல்லது ஊடாட்டத்தை கொண்டுள்ளது.

அ) ஒருவர் மற்றொருவரைச் சந்திக்கும்போது அங்கே சமூக ஊடாட்டம் (Social interaction) ஏற்படுகின்றது. இதனால் ஒவ்வொருவரும் மற்றவரிடம் வாஞ்சைப் பாட்டை(Affect) ஏற்படுத்தி தானும் வாஞ்சைப் பாட்டுக்கு ஆளாகின்றனர்.

ஆ) ஒரு தனியாள் ஒரு குழுவுடன் தொடர்பு கொள்ளும்போது அக்குழுவில் உள்ளவர்கள் இத்தனியாளின் நடத்தையைப் பாதிக்கலாம்.

இ) ஒரு தனியாளின் தொடர்பால் அக்குழுவில் உள்ள அனைவருக்கும் ஊடாட்டம்(Reaction) ஏற்படலாம்.

ஈ) ஒரு குழுவில் உள்ளவர்களுக்கும் இன்னொரு குழுவில் உள்ளவர்களுக்கும் ஊடாட்டம் ஏற்படலாம்.

சமூக உளவியலானது இவ்வாறான பல்வேறு வகையான சமூக நடத்தைகளின் தன்மைகளை ஆராய்கின்றது.

2. சமூக உளவியலானது சமூகப் பிரச்சினைகள் மற்றும் சீர்குலைவுகள் எவ்வாறு ஏற்படுகின்றது என்பதையும் அவற்றை எவ்வாறு தணிக்கலாம் என்பதையும் எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பதையும் புரிந்து கொள்ள நமக்கு உதவுகின்றது

3. சமூக உளவியலானது சமூக எண்ணங்கள் எவ்வாறு ஏற்படுகின்றது, மாறுகிறது, மற்றும் அதனை எவ்வாறு அளக்கலாம் என்பவற்றை அறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இதன் மூலம் ஒரு தனியாள் தன்னுடைய குழுவையும் பிறகுழுவையும் எவ்வாறு புலக்காட்சி பெறுகின்றான்(Perceive) என்பதை அறிய முடியும். இது எவ்வாறு தப்பெண்ணம் அல்லது சார்பெண்ணம் (Prejudice) ஏற்படுகின்றது என்பதை புரிந்து கொள்ள உதவுகின்றது.

4. சமூகச் சூழலுடன் மனிதனுக்குள்ள தொடர்பை அறிவியல் சார்ந்து (அதாவது, விஞ்ஞான பூர்வமாக) அறிந்து கொள்வது சமூக உளவியலின் மற்றுமொரு நோக்கமாகும்.

- சமூக உளவியல் பல நூற்றாண்டுகளாக மனிதர் களுடைய பிரச்சினைகளைப் பற்றியும் அவர்களுடைய சிக்கல்களைப் பற்றியுமே பெரும்பாலும் ஆராய்ந்தது. தத்துவ அறிஞர்கள் பெரும்பாலும் மனிதர்களின் ஒழுக்கங்களைப் பற்றியும் நடத்தைகளைப் பற்றியும் சமுதாயத்தில் நல்லவை எவை கெட்டவை எவை என்பது பற்றியுமே ஆராய்ந்தனர். ஆனால் தற்போதைய சமூக உளவியலோ மனிதனை பாரபட்ச மின்றி ஆராய்வதோடு, அவனின் சமுதாயம் சார்ந்த உறவை விஞ்ஞான பூர்வமாக ஆராய்கின்றது.

5. ஒரு மனிதனின் நடத்தையைத் தூண்டும் சக மனிதர்களின் நடத்தையை அறிந்து கொள்வதும் சமூக உளவியலின் மற்றுமொரு நோக்கமாகும்.

- காரணிகள் மற்றும் காரணிச் சூழ்நிலைகள் எப்படி ஒரு மனிதனின் செயல்களைத் தூண்டுகின்றன என்பதைக் கருதும் போது, சில நேரங்களில் பொருட்கள் கூட மனித நடத்தை களைத் தூண்டக் கூடும். உதாரணமாக, தேசியக் கொடியைக் காணும்போது ஒருவருள் ஏற்படும் பெருமிதம். இது ஓர் அக எதிரியக்கம். இவ்வாறாக ஒரு மனிதனுடைய நடத்தையை அவனுடைய இடைவினை(interaction), ஊடாட்டம் அல்லது எதிரியக்கம் (reaction), அனுபவம்(experience) போன்றவற்றின் மூலம் அறிந்து கொள்ள முடியும். அதாவது ஒரு மனிதன் மீது சமூகச் சூழல் ஏற்படுத்தும் தாக்கத்தை அறிந்து கொள்ள முடியும்.

இவ்வாறாக, மேலே விபரிக்கப்பட்ட வகையில் சமூக உளவியலின் இயல்புகளும் நோக்கங்களும் அமைந்து உள்ளன. இவையாவும் சமூக உளவியலின் இன்றைய முக்கியத்துவத்தை எமக்கு உணர்த்துகின்றன.

# உடற் கூற்று உளவியல்

உளவியல் என்பது நடத்தைகள் பற்றியதும் அறிகை பற்றியதும் உடற்கூற்றுச் செயன்முறைகள் பற்றியதுமான ஒரு விஞ்ஞானம் என்பர். உளவியல் பலதுறைகளையுடைய அறிவியல். எனினும், எல்லாத்துறைகளிலும் அதன் முக்கிய நோக்கம் மனித நடத்தையை முழுமையாக ஆராய்வதாகும்.

உடற்கூற்று உளவியல் என்பது மனித நடத்தையை உயிரியல் கண்ணோட்டத்தில் நோக்குவதாகும். அதாவது, உடற்கூற்று உளவியலானது, மனித நடத்தையை, உடல் சார்ந்த உறுப்புக்களின் இயக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கின்றது.

ஒருமைப்படுத்தப்பட்ட ஓர் உயிரியல் அலகாக மனிதனை உளவியல் கருகிறது. சூழ்நிலையிலுள்ள தூண்டல் களுக்கு தேர்ந்தெடுத்த துலங்கல்களை மனிதன் காட்டுகிறான். இத்துலங்கல்களைப் பகுப்பாய்வு செய்யும்போது, அவை உள, உடற்கூற்றுப் பொறிநுட்பம் பொருந்தியவையாகக் காணப்படு கின்றன. எனவே மனித நடத்தையை ஆராயும் பொருட்டு, மனித உடற்கூறுகளின் தொழிற்பாடுகளை அறிந்து கொள்வது உடற்கூற்று உளவியலின் முக்கியமான நோக்கமாகும்.

ஓர் உயிரியின் நடத்தை பல்வேறு உயிரியற் செயன் முறைகளால் கட்டி ஆளப்படுகின்றது. குறிப்பாக, மூளையும் முண்ணானும் இணைந்த மையநரம்புத்தொகுதியே மனித

**க.பரணீதரன்**

நடத்தைகள் அனைத்தையும் கட்டுப்படுத்துவதாகும். எனவே நரம்புத்தொகுதியின் செயற்பாடுகள் பற்றி, குறிப்பாக மூளையின் அமைப்புப் பற்றியும் செயற்பாடுகள் பற்றியும் அறிந்து கொள்வது உடற்கூற்று உளவியலின் நோக்கமாகும்.

நடத்தை பற்றிய ஆராய்ச்சியானது, மூளையை மிகவும் சிக்கல் வாய்ந்த நரம்புசார் இலத்திரனியல் அமைப்பாக(Neuro electronic System) கருதுகிறது. உடனடியான புலனுர்ச்சிகளை மாத்திரமன்றி, நீண்ட நாட்களுக்கு முற்பட்ட துலங்கல்களை யும் மின்னோட்ட மண்டலம் ஏற்படுத்தக் கூடியது என்பதால் உள உடற்கூற்றுச் செயன்முறையின் ஆராய்ச்சி திடநிலையி லுள்ள உயிரினத்தில் கடினமான செயலாகும்.

உடற்கூற்று உளவியலானது உடற்கூடுகள் அல்லது பகுதிகள் இணைந்து செயல்படுவதை மட்டும் ஆராயாது, அவை தனித்தனியே செயல்படுவதை ஆராய்வதையும் உடற்கூற்றியல் உளவியல் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இயற்கைத் தோற்றப்பாடுகளை விளக்கும்போது எல்லா விஞ்ஞானிகளும் பொதுமையாக்கஞ் செய்தல்(Generalization), ஒடுக்கல்(Reduction) ஆகிய இரு அடிப்படைகளைப் பயன்படுத்து கின்றனர். உளவியலாளர்களிற் பலர் பொதுமையாக்கத்தையும் உடற்கூற்றியலாளர்களிற் பலர் ஒடுக்கலையும் பயன்படுத்துவர். தமது பரிசோதனைகளிலிருந்து உய்த்தறிந்து கொண்ட பொது விதிகளின் உதாரணங்களாக குறிப்பான சில நடத்தை நிகழ்வு களை விளக்குதல் பொதுமையாக்கஞ்செய்தல் ஆகும். சிக்கலான தோற்றப்பாடுகளை எளிமையானவற்றைக் கொண்டு விளக்குதல் ஒடுக்கல் ஆகும். ஆனால் உடற்கூற்று உளவிய லாளர்கள் தனியே ஒடுக்கலை ஆதரிப்போராக இருக்க முடியாது. நடத்தைகளை அவதானித்து அதே நேரத்தில் நிகழும் உடற்கூற்று நிகழ்வுகளோடு இணைபு படுத்துவது மட்டும் போதாது. ஒத்த நடத்தைகள் வெவ்வேறு காரணங் களுக்காக வெவ்வேறு உடற்கூற்றுப் பொறிமுறைகளால் தொடக்கி வைக்கப்படலாம். எனவே, ஒரு நடத்தையைத் தோற்றுவித்து உடற்கூற்று நிகழ்வுகளை விளங்கிக்

கொள்வதற்கு முன் ஏன் அந்நடத்தை இடம் பெற்றதென உளவியல் ரீதியாக விளக்கிக் கொள்ள வேண்டியதும் உடற் கூற்று உளவியலின் ஓர் அம்சமாகும்.

புலனுறுப்புக்கள். புகுவாய்கள், சுரப்பி இயக்கிகள், தசை இயக்கிகள், நரம்பு பொருந்து வாய்கள் ஆகியன மனித நடத்தையில் தலையிடுகின்றன. எனவே, அவற்றின் உடற் கூற்றியலையும். உடலமைப்பியலையும் சரியாகப் புரிந்து கொண்டாற்தான் மனிதனுடைய முழு நடத்தையையும் நாம் நன்கு புரிந்து கொள்ள முடியும். மொத்தச் செயல்முறைகளை யும் சிறுகூறுகளாக்குதல் என்பது சில பகுதிகளின் செயலை உடைப்பதன் மூலம் தான் நடைபெற முடியும். ஏனெனில் வெளிப்படும் ஒவ்வொரு செயலுக்கும் பின்னணியாக உடற் கூற்றுப் பொறிநுட்பம் ஒன்றுண்டு. எனவே, உடற்கூற்று உளவியலாளர் மனித நடத்தையின் பொறிநுட்பத்தைப் பரிசோதனை செய்வதற்கு முயற்சிகள் எடுப்பதன் முன் உடலின் அமைப்புகளைப் பற்றியும் செயல்முறைகளைப் பற்றியும் முழு அறிவு பெற வேண்டியது அவசியம்.

உடலமைப்புக்களைத் தெரிந்து கொள்வதால் மட்டும் நடத்தை பற்றிய முழு அறிவும் ஏற்படாது. அந்தத்துறைகளி லிருந்து பெற்றுக் கொண்ட உண்மைகளும் கோட்பாடுகளும் செயல் சார்பான உபயோகங்களுக்கு ஏற்றவையா என்று பரி சோதனை செய்து பார்த்தலும் உடற் கூற்றியலின் நோக்க மொன்றாகும்.

உணவுச்சக்திகள் சமிபாட்டுத்தொகுதியினால் இரசா யனப்பொருளாக மாற்றப்பட, இவை நரம்பு தசைநார்த் தொகுதியின் உள் உறுப்புகளுக்கு குருதிச் சுற்றோட்டத் தொகுதியால் எளிதாக கிடைக்கச் செய்யப்படுகின்றது. எனவே உள் உறுப்புகளின் தொழிற்பாட்டில் இம்மூன்று தொகுதிகளும் பங்களிக்கின்றன. எனவே இம்மூன்று தொகுதிகளின் செயற் பாடுகள் பற்றி அறிந்து கொள்ளல் உடற்கூற்று உளவியலின் மிக முக்கியமான நோக்கமாகும். உடற்கூற்றுப் பொறிநுட்பமான உளவியற் செயன்முறைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

உதாரணமாக, மூளையில் ஏற்படும் பாதிப்பு, ஒருவரின் மொழிக் குறைபாடுகளுக்கும் இயலாமைகளுக்கும் காரணமாகலாம். எனவே உடற்கூற்றுப் பொறிநுட்பம் நடத்தைகளில் ஏற்படுத்தக் கூடிய விளைவுகளை அறிந்து கொள்வதும் உடற்கூற்றியலின் நோக்கமாகும்.

மனித நடத்தை பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபடும் உடற்கூற்று உளவியலாளர், ஆராய்ச்சிக்குட்படும் பிரச்சினை நரம்பு தசைநார் உறுப்புகளில் எந்த ஒரு குறிப்பிட்ட பகுதி யினால் ஏற்படுவதாக இருந்தாலும் சரி, அப்பகுதி நீக்கப்பட்ட பிறகு ஏற்படுகின்ற நடத்தை மாற்றத்தை பிரச்சினை ஏற்படு வதற்கு முன்பிருந்த நடத்தையோடு ஒப்பிட்டு நோக்குகின்றனர். சில வேளைகளில் நரம்பு தசைநார் உறுப்புகளை "மின் அதிர்ச்சி" கொடுத்து நடத்தைகளைப் பதிவு செய்கின்றனர். இன்னும் சில வேளைகளில், தீவிரப்படுத்தப்பட்ட நடவடிக்கையின் பின்னடையாளங்களுக்கு மூளையின் பல்வேறு அமைப்புகள் எவ்வாறு செயற்படுகின்றன என்றும் ஆராய்கின்றனர்.

இவை விலங்குகளுடனேயே மேற்கொள்ளப்பட்டன. மனிதருடன் அதேபோன்ற நடவடிக்கைகளை அதே முறையில் ஆராய்வதில் பல சிரமங்கள் இருக்கின்றன. எனவே ஊறு செய்யாத ஆராய்ச்சிமுறைகளைப் பயன்படுத்த வேண்டும் என்பது உடற்கூற்று உளவியலின் வரையறையாக (எல்லை யாக) உள்ளது. ஊறு செய்யாத வகையில், மனித நடத்தைகளை ஆராயும் வழிமுறைகளைப் பயன்படுத்துதலும் உடற்கூற்று உளவியலின் ஒரு நோக்கமாகும்.

உடற்கூற்று உளவியல் என்பது மிகவும் செயல் சார்பான முக்கியத்துவம் வாயந்த ஓர் அறிவியல் ஆகும். ஆனால் அதேவேளை மிகவும் சிக்கலான ஆராய்ச்சித்துறையாகவும் இருக்கின்றது. ஆகவே இத்துறையில் தனித்திறமை பெறுகின்றவர்கள் பல்துறைப்புலமை வாய்ந்தவர்களாகவும் பல கடினமான தொழில் நுட்பங்களில் திறமை பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும்.

# நுகர்வோர் உளவியல்

நுகர்வோர் நடத்தை பற்றி கற்கின்ற துறையே நுகர்வோர் உளவியல் ஆகும்.

ஒரு மனிதன் பிறந்தது தொடக்கம் இறப்பு வரை தொடர்ச்சியாக நுகர்வுச்செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டே இருக்கிறான். இங்கு நுகர்வுச்செயற்பாடு என்பது ஒரு பொருளைக் கொள்வனவு செய்துவிட்டு பயன்படுத்துதல் ஆகும்.

ஒரு மனிதனுடைய தேவை அல்லது விருப்பம் கொள் வனவு ஆற்றல் உள்ளதாக மாறும் பொழுது அது நுகர்வாக மாறுகின்றது. அதாவது இங்கு நுகர்வு என்னும் போது பொருட்கள் சேவைகளைப்பெற்று அவற்றைப் பயன் படுத்துதல் ஆகும்.

நுகர்வோர் நடத்தைக்கு பின்வருவன அடிப்படையாக அமைகின்றன.

1. தேவைகளை திருப்திப்படுத்தல் - இங்கு மனிதர்களது தேவைகள் எண்ணற்றவை வாழ்க்கைக்காலம் முழுவதும் சதா வளர்ந்து கொண்டே, செல்லும். அதாவது மனிதன் வளர வளர தேவைகளும் வளர்ந்து கொண்டே செல்லும். இங்கு வளர்ச்சி என்பது தனியே உடல் வளர்ச்சி மட்டும் அன்று பொருளாதார வளர்ச்சியையும் குறித்து நிற்கின்றது.

**க.பரணீதரன்**

2. இல்லாதவற்றை நிறைவு செய்தல் - மனிதனுடைய தேவைகளுடன் ஒப்பிடும் பொது வளங்கள் வரையறுக்கப் பட்டன. எனவே இந்த வளங்களைப் பயன்படுத்த போட்டி ஏற்படும். இதனால் மனிதனில் இல்லாதவைகள் அதிகரித்தே காணப்படும். எனவே இவற்றை நிறைவு செய்தே மனிதன் தொடர்ந்தும் போராடிக்கொண்டே இருப்பான்.

Goerge katona என்பவரது "powerful consumer" என்னும் நூலில் பணத்திற்கும் உளவியல் காரணிகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

1. பொருளாதாரப்பின்னடைவு (Economical backwordness)
2. பணவீக்கம் (inflation)
3. பெரிய பணக்காரர்கள் (Affluance)

இவற்றில் இருந்து தான் நுகர்வோர் நடத்தையும் நுகர்வோர் உளவியலும் தோன்றுகின்றது என இவர் குறிப்பிடு கின்றார்.

மனிதனுடைய மனப்பாங்குகள், தேவைகள், விருப்பங்கள், ஆளுமை என்பவற்றின் மூலமே நுகர்வோர் நடத்தை வெளிப்படுகின்றது. எனவே நுகர்வோர் நடத்தைக்கு பின்னால் உள்ள மேற்குறித்த காரணங்களை அறிந்து கொள்ள பொருளியல், மானிடவியல் என்பவற்றுடன் இணைந்து உளவியலும் ஆய்வுகளை மெற்கொள்கின்றது.

நுகர்வோர் நடத்தை பற்றிய தகவல்களை அறிவதே நுகர்வோர் உளவியின் நோக்கமாகும். அதாவது குறித்ததொரு நுகர்வோர் தனது நுகர்வுச் செயன்முறையின் போது ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறான் என்பதைக் கண்டு கொள்ள நுகர்வோர் உளவியல் உதவுகின்றது. இந்த ஏன் என்ற கேள்விக்கு விடையாக அமைவது இவர்களது தேவைகளும் இல்லாமை களும் ஆகும்.

நுகர்வுச்செயன்முறையில், உளவியல் காரணிகள் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன என நுகர்வோர் உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். குறித்தவொரு நுகர்வோரின் நுகர்வு நடத்தையை நாம் விளங்கிக்கொள்ள

வேண்டுமாயின் பின்வரும் 4 உளவியல்கள் விதிமுறைகள் பற்றி விளங்கிக்கொள்ள வேண்டும்.

1. Gestalt விதிமுறை - இதன் படி ஒரு நுகர்வோர் ஓர் உற்பத்தியில் பொருளை வாங்குவதற்கு நாம் பெரிய கலா சாரத்தின் ஊடாக பார்க்க வேண்டும்.

உதாரணமாக ஏன் சில குறிப்பிட்ட மக்கள், ஒரே விதமான சொத்தையே கொள்வனவு செய்கிறார்கள்? என்ற கெள்விக்கு விடைகாண குடியியல் நடத்தை பற்றி தெளிவாக தெரிந்து வைத்திருந்தல் அவசியம்.

2. Ice Berg தத்துவம் - நுகர்வோரைப் பற்றி அறிந்து கொள்வ தற்கு, சமூக நடத்தைகளைப் பகுப்பாய்வு செய்து, அங்கே காணப் படும் அடிப்படையான காரணியை இனங்காண வேண்டும்.

3. Dynamic Principle - ஒரு நுகர்வோருக்கு கிடைக்கும் ஊக்கிகள் நிலையற்றவை மாறும் தன்மை உடையவை. மேலும் நுகர்வோரின் நுகர்வு நடத்தையும், சமூகம், பொருளாதாரம், உளவியல் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன.

உதாரணமாக, இருவர் ஒரே தொகைப் பணத்தை வைத்திருக்கலாம் ஆனால் இருவரும் அந்தப் பணத்தை செலவு செய்யும் விதங்கள் வேறுபட்டவையாக காணப்படுகின்றது. இதிலிருந்து நுகர்வோர் நடத்தை மாறபாடு அடையும். தன்மை வாய்ந்தது என்பதை நாம் விளங்கிக்கொள்ளலாம்.

4. விம்பங்களும் அறிகுறிகளும் - நுகர்வோர், பல்வேறு பட்ட விளம்பரங்களைப் பார்த்தாலும் எது முக்கியமானதோ, அதுவே அவர்களது மூளையில் பதிகின்றது. எந்த உற்பத்திப் பொருட்களை அவர்கள் நினைக்கிறார்கள் என்பது இங்கு முக்கியமானதாகும்.

5. பல்வேறுபட்ட ஆய்வுகள் நுகர்வோர் அடிக்கடி, தமது எண்ணங்களை மாற்றுவதும், விளக்குவதும் ஆகக்காணப்

பட்டாலும் சில குறிப்பிட்ட விம்பங்களையும் அறிகுறி களையும் தமது எண்ணத்தில் வைத்திருக்கிறார்கள். இதனை அறிந்து உற்பத்தியாளர் செயற்படவேண்டும்.

இந்த மேற்குறிப்பிட்ட 4 விதிகளை அடிப்படையாகக் கொண்டே நுகர்வோர் நுகர்வுச்செயற்பாடு ஆனது இடம் பெறுகின்றது.

நல்ல நுகர்வோர் உளவியல் ஆனது ஆக்க பூர்வ மானதும் அறிவுசார்ந்ததுமான நுகர்வோரின் கோட்பாடுகளை வைத்திருக்கும் நுகர்வோர் பற்றிய தெளிவான அறிவின் அடிப்படையிலேயே உற்பத்தியானது மேற்கொள்ளப்படும்.

உதாரணமாக ஏன் குறித்த நபர் ஒருவர் குறித்தவொரு சவர்க்காரத்தையே தொடர்ந்தும் கொள்வனவு செய்கின்றார் என்பதற்கான விடை காண்பது கஷ்டமானது. ஏனெனில் சவர்க் காரம் துப்பரவாக்கும் என்றும் ஒரே பணியைச் செய்தாலும் தமது உணர்வின் ஊடாகவே இதனை வாங்குகின்றனர். சிலருக்கு அதன் மணம் பிடித்திருக்கும் சிலருக்கு அதன் வடிவம் பிடித்திருக்கும்.

## நுகர்வோர் உளவியலைக் கற்பதன் பயன்கள்

நுகர்வோரின் தேவைகள், மனப்பாங்குகள், விருப்புகள், கவர்ச்சிகள், நாட்டங்கள் என்பவற்றை உற்பத்தியாளர்கள் கண்டறிவதன் ஊடாக சிறப்பான உற்பத்தியை அவர்கள் மேற்கொள்வதற்கு அவர்கள் அதனை சிறப்பான முறையில் சந்ததைப்படுத்துவதற்கும் நுகர்வோர் உளவியல் பற்றியதான அறிவு அத்தியாவசியமாகின்றது.

உற்பத்தியாளர், சந்தைப்படுத்துனர்கள், விலை, விளம்பரம், விநியோகம் போன்றவற்றைப் பற்றி சிறப்பான தீர்மானங்கள் எடுப்பதற்கும், என்ன பொருளை எந்த அளவில் யாருக்காக உற்பத்தி செய்ய வேண்டும் என்பவற்றைக் கருத்தில் கொள்வதற்கும் நுகர்வோர் உளவியல் பயன்பாடு உடையதாக உள்ளது. (mowen - *1989)*

நுகர்வோர், தாம் உற்பத்தியாளர்களிடமிருந்தும்

விற்பனையாளர்களிடமிருந்தும் தம்மைப்பாதுகாத்துக் கொள் வதற்கும், தரமான பொருளை மிக நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கும், நுகர்வோர் உளவியல் பற்றிய அறிவு அவசியமாகும்.

## நுகர்வோர் உளவியல் பயன்படுத்தும் ஆய்வு முறைகள்

1. அவதானம்
2. நேர்காணல் முறை/பேட்டி முறை
3. வினாக்கொத்து முறை
4. மாதிரிமுறை
5. உருவக ஆய்வு முறை (Meta phor Analydid)

நுகர்வோர் உளவியலாளர்கள், வாங்குவோரின் நடத்தையினை அவர்களது மனப்பாங்குகளையும், நடத்தை களையும் அறிந்து கொள்வதற்கு psycho graphics என்னும் முறை களைப் பயப்படுத்துகின்றனர். இதன் ஒரு வடிவமே இவ்வகை ஆய்வாகும். மக்கள் சில சந்தர்ப்பங்களில் உருவங்களை அடிப் படையாகக்கொண்டு சிந்திக்கின்றனர். நுகர்வோரின் சிந்தனை உருவங்கள், படங்களாக அவர்கள் எண்ணங்களில் இருந்தால் அதனை சொற்களின் வாயிலாக விளக்கமுடியாது. எனவே நுகர்வோர் தமது உருவங்களை சொற்கள் அல்லாத வேறு முறைகளில் வெளிப்படுத்துகின்றனர். உதாரணம்:

இசை
படம்
சித்திரம்
ஒலி

அதாவது ஒரு வகையான விளக்க முறையைக்கொண்டு இன்னொரு பொருளை விளக்கும் முறை உருவகம் எனப்படும். நுகர்வோர் தங்களது சிந்தனையிலும், தகவல் தொடர்பிலும் உருவங்களையே பயன்படுத்துகின்றனர் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றது.

உதாரணமாக இம்முறையில் பொது நுகர்வோரிடம்

பருவ இதழ்கள், கத்திரிக்கோல், பசை, காகிதங்கள் என்பன கொடுக்கப்படும். இதழ்களில் இருந்து தமது உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய படங்களைத் தயாரிக்குமாறு நுகர்வோர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதன்மூலம் நுகர்வோர் விரும்பும் பொருட்கள் தெரியப்படுத்தப்படும் இதிலிருந்தும் உற்பத்தியாளர் மேற்குறிப்பிட்ட உருவங்களை பொருட்களாக மாற்றி சந்தைப்படுத்துவார்கள்.

## வர்த்தகத்துறையில் நுகர்வோர் உளவியலின் பிரயோகம்

நுகர்வோர் வியாபார நடவடிக்கைகள் தமது உற்பத்திகளை மேம்படுத்தவும் புதியவற்றை விருத்தி செய்யவும், உளவியல் 5 வழிகளில் பயன்படுத்தப்படமுடியும்.

**1.** நுகர்வோர் நடத்தைக்கு காரணமான அடிப்படை மனித உந்தல்களை விளங்கிக்கொள்வதன் மூலம்

**2.** உற்பத்திகளையும் சேவைகளையும் நுகர்வோர் மதிப்பளிக்கும் வெவ்வேறு வழிகளை விளங்கிக்கொள்வதன் மூலம்

**3.** நுகர்வோரின் சாதாரண நாளாந்த வாழ்க்கையையும் நடவடிக்கைகளையும் விளங்கிக்கொள்வதன் மூலம்

**4.** வெவ்வேறு வகையான ( உ- ம் :ஆண்கள், பெண்கள்) நுகர்வோர் எவ்வாறு சிந்திக்கின்றார்கள், உணர்கிறார்கள், செயற்படுகிறார்கள் என்பதை விளங்கிக்கொள்வதன் மூலம்

**5.** உற்பத்தி எண்ணக்கருக்களைச் சேகரிப்பதற்கு பரிசோதனைகளை வடிவமைப்பதன் மூலமும், தாமாகவே உற்பத்தியாளர்கள் புதுமை காண்பதன் மூலம்.

## அடிப்படையான மனித உந்தல்களை விளங்கிக்கொள்ளல்

**1.** உயிரியல் ரீதியானது

உண்பதற்கு, குடிப்பதற்கு, தூங்குவதற்கு, சூடாக இருப்பதற்கு, நோவைத்தணிப்பதற்கு என உள்ள உந்தல்கள். உற்பத்தி உதாரணங்கள் - உணவு, பானங்கள், உடுப்புக்கள், மின், கட்டில்கள், மருந்துவகைகள்

**2.** பாலியல் ரீதியானது

பாலியல் உந்தல்களும், எதிர்ப்பாலரைக் கவர்வதற்கும் காரணமான உந்தல்கள்

உற்பத்தி உதாரணங்கள் - வாசனைப்பொருட்கள், மேக் - அப், நாகரிக உடுப்பு, ஆபரணங்கள், கைத்தொலைபேசிகள், தலை அலங்காரம், ஒப்பனைகள், கவர்ச்சிக்காக முகத்தில் மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சைகள்

**3.** பாதுகாப்பு ரீதியானது

எங்களையும் எம்மால் விரும்பப்படுபவர்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான உந்தல், விபத்துக்கள், சூழல் அச்சுறுத்தல்கள், சமூக அச்சுறுத்தல்கள் போன்றவற்றிலிருந்து பாதுகாப்புத் தேடும் உந்துதல்

உற்பத்தி உதாரணங்கள் - பிள்ளைகளின் கார் இருக்கைகள், திருடர் எச்சரிப்புப்பொறி, பூட்டுக்கள், தலைக்கவசங்கள், வங்கியிடல், ஆயுள்காப்புறுதி

**4.** கட்டுப்பாட்டு ரீதியானது

எமது வாழ்க்கையையும், ஏனையோரின் வாழ்க்கையையும், பிறர், நிகழ்ச்சிகள், பொருட்கள், நேரம், சூழல் போன்றவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான உந்தல்

உற்பத்தி உதாரணங்கள் - தினக்குறிப்புக்கள், கடிகாரங்கள், கைத்தொலைபேசிகள், பதிலளிக்கும் தொலைபேசிகள், கணனிகள், சொந்தமானகார்கள், சொந்தமான ஒழுங் காக்கிகள் (organisers)

**5.** சமூக ரீதியானது

இடைத்தொடர்புகள், காதல், நெருங்கிய உறவு போன்றவற்றுக்கான உந்தல்

உற்பத்தி உதாரணங்கள் - தொலைபேசிகள், பரிசுப் பொருட்கள், வாழ்த்துமடல்கள்

**6.** தனிச்சிறப்பு ரீதியானது (தனித்தன்மை/தனியாள் ரீதியானது)

எமது தனியாள் அடையாளத்தை நிறுவுவதற்கும், எமது தனியாள் சார்ந்ததும் ஆக்கத்திறன் சார்ந்ததுமான சக்தியை விருத்தி செய்யவும் எமக்குள்ள உந்தல்

உற்பத்தி உதாரணங்கள் - ஆடைகள், சங்கீதம், வீட்டு வசதிப்பொருட்கள், சில கார் வகைகள், மாலைநேர வகுப்புக்கள்

7. தூண்டல் ரீதியானது

புலன்சார், அறிகைசார், அல்லது உடல்சார் உந்தல்கள்

உற்பத்தி உதாரணங்கள் - சொக்கலற், வைன், ஹோட்டல் உணவுகள், சினிமாக்கள், இசை, TV, பொம்மைகள், விளையாட்டுக்கள், விடுமுறைகள்

நடைமுறையில். மனித நடத்தையானது, இந்த உந்தல்களின் சிக்கலான ஒரு சேர்க்கையினால் (கூட்டினால்) ஊக்கப்படுத்தப்படும்.

உதாரணமாக, இன்றைய இரவு விருந்துக்கு என்ன சமைக்கலாம் என ஒருவர் வருந்துவாராயின்

- ஒவ்வொரு வரும் நன்றாக உணவளிக்கப்பட வேண்டும் என்ற உந்தலாலும் (உயிரியல் ரீதியானது)
- சுவையாவும் உணவின் அமைப்பினாலும் நன்கு மகிழவேண்டும் என்ற உந்தலாலும் (தூண்டல் ரீதியானது)
- உணவிலுள்ள சேர்மானங்களை அறிந்திருக்க வேண்டும் என்ற உந்தலாலும் (கட்டுப்பாட்டு சார்)
- மற்றொருவரின் விருந்தில் கொடுக்கப்பட்டதிலும் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்ற உந்தலாலும் (தனிச்சிறப்புசார்)
- எல்லோராலும் மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டும் என்ற உந்தலாலும் (சமூக ரீதியானது) உந்தப்படுகின்றார்.

இதே போல, ஒரு தனி உற்பத்தி இந்த 7 உந்தல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட உந்தலைத் தரலாம்.

*உதாரணமாக, கைத்தொலைபேசிகள்*

- *நண்பர்களுடன் உரையாடவும் (சமூக ரீதியான உந்தல்)*
- *பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் (பாதுகாப்ப ரீதியானது)*
- *வர்த்தக ஒழுங்குகளை மேற்கொள்ளவும் (கட்டுப்பாட்டு ரீதியான உந்தல்)*
- *எதிர்ப்பாலாரைக் கவரவும் (பாலியல் ரீதியான உந்தல்)*
- Phone *உறையினாலும்,* Ringing tone *இனாலும் உங்கள் தனித்சபத்தை வெளிப்படுத்தவும் (தனிச்சிறப்பு/ தனியாய் ரீதியான உந்தல்)*
- Phone *இல் விளையாட்டுக்கள்* (Games) *விளையாடவும் பயன்படுத்தலாம்.*

*இவை பயனளிப்பதாக இருந்தால் மட்டுமே, ஒவ்வொரு மனித உந்தலையும் திருப்தி செய்யும்.*

*அடிப்படையான உந்தல்களையும் அவற்றுக்குப் பொருத்தமான உற்பத்திகளையும் அறிந்து கொள்வது பின்வரும் வழிகளில் வர்த்தக நிறுவனங்களுக்கு உதவலாம்.*

- *எந்த வகையான உந்தல் வகைகளின் சேர்மானம் தமது உற்பத்திகளுக்கான திருப்தியைத் தரும் என அறிதல்.*
- *தமது உற்பத்திப்பொருட்கள் குறித்த உந்தல் ஒன்றை எவ்வளவு தூரம் திருப்திப்படுத்தல் என்பதை மேம்படுத்தல்*
- *தற்போதைய உற்பத்தியை விளைதிறன் மிக்க வகையில் சந்தைப்படுத்தல்*
- *புதிய உற்பத்திகளுக்கான கருத்துக்களைப் பெறல்*

## நுகர்வோர் உற்பத்திகளையும் சேவைகளையும் எவ்வாறு மதிப்பளிக்கிறார்கள் என விளங்கிக்கொள்ளல்

*எந்த ஒரு உற்பத்தியை/சேவையை நுகர்வோர் மதிப்பளித்தல் 3 பரிமாணங்கள் உள்ளதாக உளவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.*

***1.*** *பயன்படுதன்மை* (Utility) - *இந்த உற்பத்தியினால் என்ன பயன்பாடுகளைக் கொண்டிருக்கிறார்கள்*

2. அனுபவம் - இந்த உற்பத்தியால் என்ன அனுபவங்களைப் பெறுகிறார்கள்.
3. குறியீட்டுத்தன்மை - இந்த உற்பத்திகளினால் நுகர்வோர் பற்றி என்ன அறியக் கூடியதாக உள்ளது.

இப்பரிமாணங்களை அறிந்து கொள்வதால் ஒரு கம்பனிக்கு பின்வரும் வழிகளில் உதவும் :
1. பயன்படுத்தும் உற்பத்தியில் பொருட்களின் மூலமான அனுபவங்களை முழுமையாக்குதல்
2. புதிய பரிசோதனைக்குரிய பரிமாணங்களை அறிந்து கொள்ளல்
3. புதிய குறியீடுகளை உணர்ந்து கொள்ளல்
4. முன்பு அறியப்படாத புதிய, ஆச்சரியம் தரும் பயன்பாடு களை அறிதல்

## நுகர்வோரின் சாதாரணமான நாளாந்த வாழ்க்கையையும் நடவடிக்கைகளையும் விளங்கிக்கொள்ளல்

மனித நடத்தைக்கோலங்களை அவதானிக்கவும், பதிவு செய்யவும், விளக்கவும், உளவியலாளர்கள் அறிந்துள்ளார்கள். பின்வரும் நடத்தைகளை அறிந்து கொள்வது பயனுடையது.
1. சில்லறை வியாபாரிகளிடம், குறித்த உற்பத்தி எவ்வாறு தெரிவு செய்யப்பட்டு வாங்கப்படுகின்றது?
2. மக்கள் உண்மையில் எவ்வகையில் உற்பத்தியைப் பயன்படுத்துகிறார்கள்?
3. நேரடியாக குறித்த உற்பத்திப் பொருளுடன் சம்பந்தப் படாமல், பிற நடவடிக்கைகளுடன் சேர்த்துப் பயன்படுத்து பவர்கள் என அறிதல்

# கடந்த நிலை உளவியல்

கடந்த நிலை உளவியலானது உளவியலின் பிரிவுகளில் ஒன்றாகும். விஞ்ஞான உள சக்தி ஆராய்ச்சி எனவும் அழைக்கப்படும். விஞ்ஞான கொள்கைகளால் நிருபிக்கப்பட முடியாத, விளக்கப்பட முடியாத ஆற்றல்களை இவ் உளவியல் ஆராய்கின்றது. கடப்புநிலை உளவியலாளர்கள் இது தொடர்பாக வெவ்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அசாதாரண தோற்றப்பாடுகளை இரண்டு பெரும் பிரிவுகளாக நோக்கலாம்.

1. புலன் கடந்த புலக்காட்சி ESP (Extra sensory perception)
2. உள்ளத்தால் இயங்கல்/உளசக்தி இயக்கம் (Psycho kinesis)

**புலன் கடந்த புலக்காட்சி**

இது புலன் அங்கங்களை பயன்படுத்தாது தகவல்களை பெற்றுக்கொள்ளும் ஆற்றலாகும். இதனுள் தொலைவில் உள்ள பொருட்கள்/நிகழ்ச்சியிலிருந்து தகவல் பெறப்படல் முன்னறிகை போன்ற பல அடங்குகின்றன.

சாதாரணமாக நாம் எமது ஐம்புலன்களின் ஊடாகவே புலன் தரவுகளைப்பெற்று (Sensation) புலக்காட்சியைப் பெறுகின்றோம்.இது சாதாரணமாக புலன் செயற்பாடுகளின் ஊடாக நடைபெற்று வருகின்றது. ஆனால், இந்த பௌதீக உலகைப்பற்றிய தகவல்களை அடிப்படைப்புலன்களை

**க.பரணீதரன்**

பயன்படுத்தாமல் பெற்றுக்கொள்ள முடியுமா? என்ற வினாவிற்கு ஆம் என்று விடையளித்து இதுவே புலன்கடந்த புலக்காட்சி (Extra Sensory perception) என்பதை விளக்குகின்றன. அதாவது புலன் தரவுகளிற்கு அப்பாற்பட்ட, தடப்பொருட் களிற்கு அப்பாற்பட்ட ஒரு கிரகிப்பு என கூறுகின்றனர். ESP சக்தி நிறைந்தவர்களால் மற்றவர்களது மனதை அறிய முடியும், எனவும் சுவர்களிற்கு இடையிலான பொருட்களை மனதினால் பார்க்க முடியும் எனவும் எதிர்காலம் பற்றி முன்கூட்டியே தெரிவிக்க முடியும் எனவும், மக்கள் மிகவும் ஆழமாக நம்புகின்றனர். ESP பற்றி வானொலி தொலைக்காட்சி போன்ற தொடர்பு ஊடகங்களும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றனவும் அடிப்கடி செய்தி வெளியிட்டு வருகின்றன. ESP இனை நாம் பெற்றுக்கொண்ட தரவுகளின் ஊடாக நோக்கினால், ESP என்பது உண்மையான ஒன்றே Telepathy (தொலைவில் உணர்தல்) மூலம் ஒருவர் இன்னொருவருக்கு தகவல்களை அனுப்பவும் அதே போல தகவல்களைப் பெறவும் முடியும்.

அதாவது ஒருவர் தாம் இன்னொருவருக்கு சொல்ல எண்ணும் கருத்திணை தமது உளசக்தியை பயன்படுத்தி மற்றவரின் உள்ளத்தில் பதியவைக்கும் முறையே Telepathy ஆகும். Telepathy ஐ பொறுத்தவரை, உளத்திற்கும், எண்ணங்களிற்கும், கால, தேச, வர்த்தமானங்கள் இல்லை. எண்ணங்கள் வினாடிக்கு 200000 வேகத்தில் பயணம் செய்வதாக அறிவிய லாளர்கள் கூறுகின்றனர். கடந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி களை உணர்தல் Retro cognition எனப்படுகின்றது. Pre congnition என்பது ESP இன் ஓர் வடிவமாகும். எதிர்காலத்தில் நடக்க இருக்கும், நிகழ்ச்சிகளை முன்கூட்டியே கூறும் தன்மை இது வாகும். அரசியல் தலைவர் ஒருவரது இறப்பு, உலக விளையாட்டு போட்டிகளின் பெறுபெறுகள் போன்றவற்றைக் குறிப்பிடுதல் நுண்ணறிகை என்பதில் அடங்கும் சோதிடர்களும், பங்குச் சந்தை பகுப்பாளர்களும் இத்தகைய தன்மையினைப் பயன் படுத்தி உழைக்கின்றார்கள்.

க.பரணீதரன்

ஞான திருஷ்டி என்பது புலன் உறுப்புக்களால், நேரடியாக தூண்டாத பொருட்களையும், நிகழ்ச்சிகளையும் உணரும் உள ஆற்றல் ஆகும். தூரத்தே நிகழ்பவை இதன் மூலம் அறியப்படுகின்றது. அதாவது ஒரு நண்பனின் வீட்டில் தீ பற்றிக் கொள்வதை, மற்றொரு நண்பர் உணர்தல் போன்றவற்றை இதற்கு உதாரணமாகக்கொள்ளலாம். மேலும், cards விளை யாட்டில் ஈடுபடும்போது அடுத்ததாக எந்த card இடப்படும் என்பதை மனதினால் உணர்ந்தால் அதுவும் ஒரு ஞானதிருஷ்டி ஆகும்.

உளசக்தி (Psycho kinesis) ESP உம் ஒன்றுடன் ஒன்று தொடர்பு உள்ளவையாகும். உளசகத்தியின் மூலம் திடப் பொருட்களை செயற்படுத்துதல் ஆகும். உதாரணமாக மேசையை அந்தரத்தில் நிற்கச்செய்தல், உள்ளத்தால் பொருட்களை நகர்த்தல் போன்ற ஆரோக்கிய செயல்களை இந்த PK மூலம் செய்யலாம். Rhine, Praft போன்ற உளவிய லாளர்கள் Esp இனுள் PK இணை அடக்கிய போதும் சிலர் இதை தனிப்பட்ட சக்தி வடிவங்களாகவே கருதுகின்றனர்.

ESP இன் சக்தியைப் பயன்படுத்தி, தொலைந்துவிட்ட பல குழந்தைகளையும், துப்பறிவாய்வாளர்களால் துப்பு துலக்க முடியாது இருக்கின்ற பல மர்மக்கொலைக்கான காரணிகளை யும் கண்டறியப்பட்டு உள்ளதாக பல அறிக்கைகள் தெரிவிக் கின்றன. அதிகமாக அமெரிக்கர் ESP இனை நம்புகின்றனர் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. ESP இனைப் பற்றி அதீத உளவியலாளர்கள் நடத்திய ஆய்வுகூடப் பரிசோதனைகளை சிலர் மூடிய உறைகளில் இருப்பவற்றை அறிந்து கொண்டதை யும் ஒருவர் ஒரு போதும் அறிந்திராத இடத்திலே படமாக வரைந்து கொண்டதையும், கண்டு ஆச்சரியம் அடைந்தனர் எனினும் ஆராய்ச்சி உளவியலாளர்களும் விஞ்ஞானிகளும், ESP என்ற ஒன்று இல்லை என அதை நிரூபிக்க முடியாது எனவும் அடித்து கூறுவதாக MC Cleon குறிப்பிடுகின்றார்.

# விருத்தி உளவியல்

மனித விருத்தி என்பது நாள் முழுவதும் நீடித்துச் செல்லும் ஒரு செயல்முறையாகும். விருத்தியிலே பெறுகைகளும் இழப்புக்களும் உடல், உள்ளம், மனவெழுச்சி, அறிகை என்றவாறாக பல்வேறு பரிணாமங்களில் விருத்தி அடங்கியுள்ளது. விருத்தி சமூக வரலாற்று விசைகளுக்கு உட்பட்டது. தனி மனிதனுக்கு கிடைக்கப்பெறும் வாழ்க்கை நிலையும் சந்தர்ப்பங்களும் விருத்தியிலே செல்வாக்குகளை ஏற்படுத்துகின்றன.

ஒரு உயிரியானது தாயின் வயிற்றில் கருக்கொண்டது முதல் அது இறக்கும் வரையிலான காலப்பகுதி வரையிலான அதனது சகல விருத்தியையும் பற்றி ஆராய்கின்ற துறையே இதுவாகும்.

அதாவது விருத்தி உளவியலானது மனித வாழ்க்கைக் கால விருத்தி பற்றி ஆராய்கிறது. விருத்தி, உளவியலானது ஒரு கரு உருவானதிலிருந்து இறக்கும் வரையான காலப்பகுதியில் மனிதனின் நடத்தைகளை விபரிப்பதாகவும் விளக்குவதாகவும் எதிர்வுகூறுவதாகவும் சில சமயங்களில் மாற்றி அமைப்பதாகவும், அமைப்பதையும் இயல்பாகக் கொண்டுள்ளது.

மனிதனது விருத்தி பற்றி நோக்கும் போது அதனோடு இணைந்த வளர்ச்சி பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். உளவியலில் மனிதர் தம்மளவிலான நிறைகோள் (fullfledge)

**க.பரணீதரன்**

நிலையை அடையும் போது வளர்ச்சியும் விருத்தியும் மேம்பாடு கொள்கின்றன. இவை மனித உடலுறுப்புக்களில் நிகழும் மாற்றங்களை வெளிப்படுத்துகின்றன. இவை இரண்டுக்கு மிடையே தொடர்புகள் இருக்கின்றன. இவையிரண்டுக்கும் உடல், உள்ளம், மனவெழுச்சி, அறிகை, மொழி, அற வொழுக்கம், படைப்புத்திறன் என்பவற்றினடிப்படையில் நிகழும். எண்ணளவு நிலைப்பட்ட மாற்றம் வளர்ச்சி எனப்படும். உதாரணமாக, ஒரு சிறுவனின் நிறை, உயரம் என்பன வளர்ச்சி எனவும் அதனோடு இணைந்த பண்பளவு முன்னேற்றம் விருத்தி எனப்படும். உதாரணமாக, ஒரு மாணவனின் மொழியாற்றல், விருத்தியாகும். எனினும் வளர்ச்சி யும் விருத்தியும் ஒன்றுடொன்று தொடர்புற்று இடம் பெறுகின்றன.

உதாரணமாக, நல்ல உடல் வளர்ச்சி அடைந்த ஒருவரில் உரிய பருவங்களுக்கேற்ப விருத்தி நடைபெறும். மாறாக, அடிக்கடி நோய்வாய்ப்படும் ஒருவரில் உடல் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்பட்டு விருத்தியில் தடங்கல் ஏற்படும்.

மனித வாழ்க்கைக் காலப்பகுதியினை 8 பிரிவுகளாகப் பிரித்து அவற்றில் பல்வேறு விருத்திகளை ஆராய்வது இதன் நோக்கமாகும்.

| | |
|---|---|
| பிறப்பிற்கு முன்னுள்ள பருவம் | 0-1 |
| Infancy | 1-2 |
| Early child hood | 2-5 |
| Middle childhood | 6-12 |
| Adulascence | 13-20 |
| Young adulthood | 20-40 |
| middle adult hood | 40-60 |
| Late adult hood | 65 க்கு மேல் |

"ஒரு மனிதனது உடல், உள, சமூக, ஆன்மீகம் சார்ந்ததும் வளர்ச்சியின் காரணமாக வெளித்தெரிகின்ற பெரிய மாற்றமே விருத்தியாகும்" என்கிறார் வன்டெர்சன்டென்.

எனவே விருத்தி உளவியலானது முன்னர் குறிப்பிட்ட வாழ்க்கைக்காலத்தில் பின்வரும் விருத்திகள் பற்றி ஆராய்கின்றது.

1. உடல் விருத்தி - உடற்தொகுதிகளின் விருத்தி
2. இயக்க விருத்தி - உடலியக்க செயற்பாடுகள்
3. உளவியல் விருத்தி - ஆளுமை, சிந்தனை, ஞாபகம், மொழி, அறிகை, மனவெழுச்சி
4. உளசமூக விருத்தி
5. கலாசார விருத்தி
6. விழுமிய அறநெறிவிருத்தி
7. மனப்பான்மை
8. பால்நிலை விருத்தி
9. ஆன்மீக விருத்தி

**பயன்கள்**

மனிதனுடைய பல நிலைகளையும் அவதானித்து மனித வாழ்க்கையின் கட்டங்களை ஆராய்ந்து விளக்குகின்றது. குழந்தை, சிறுவன், வாலிபன், முதியவர் எனப் பல நிலைகளையடையும் மனிதன் உடலைப்போல் அவனின் உள்ளத்தாலும் விருத்தியடைகின்றான். இதனை கவனித்து அளந்து ஆராய்ந்து எல்லோரையும் வளர்ச்சி பெற உதவி, பயனடையச் செய்கின்றது.

உடல் ரீதியாக, உள ரீதியாக வளர்ச்சியடையாதவன், நியாயமான வளர்ச்சியை அளவு கோலாகக் கொண்டு வாழ்க்கையில் விருத்தி பெற உதவுகின்றது.

வயதுக்கேற்ப ஒழுங்காக மாற்றங்கள் நடைபெறுகின்றதா என்பதை அவதானித்து அதன்படி உடலாலும் உள்ளத்தாலும் மாறிக்கொண்டிருக்கும் மனிதன் உடல், உள வளர்ச்சி வயதுக்கேற்ப மாற்றமடைந்து கொண்டு செல்கின்றதா என்பதை அறிய உதவுகின்றது.

நடத்தைச் சீராக்கங்களுக்கு விருத்தி உளவியல் உதவுகின்றது என பிரயோக உளவியலறிஞர் ஹவிக்கேர்ஸ்ட் கூறு

கின்றார். அதாவது வயதுக்கேற்ப எங்களுடைய நடத்தைகளை பொருத்தப்பாடடைய உதவுகின்றது.

ஆரோக்கியமாக குழந்தை ஒன்றைப்பெற்றெடுத்து அதனை ஆரோக்கியமாக வளர்த்தெடுக்க உதவுகின்றது.

ஆரோக்கியமானதும், புத்திசாதுரியம்மிக்கதுமான சிறந்த ஆளுமையை கொண்டதுமான எதிர்கால சந்ததியை உருவாக்க உதவுகின்றது.

குழந்தையைப் பெற்றால் மட்டும் போதும் என எண்ணும் பெற்றோருக்கு குழந்தையின் ஒவ்வொரு உடல்-உள நலனில் கவனம் செலுத்தி அதனது வளர்ச்சிப் பருவத்தில் ஏற்படும் தடைகளை இனங்கண்டு அதற்கு பரிகாரம் தேட வேண்டும்.

**விருத்தி உளவியலில் பயன்படுத்தும் ஆய்வுமுறைகள்**

1. ethnography - குறித்த ஒரு உயிரியல் உடல்-உள-சமூக பண்பாட்டு கலாசார விழுமியங்கள் பற்றி ஆய்வு செய்வது.

2. குறுக்கு வெட்டாய்வுகள் - ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் பல்வேறுபட்ட குழந்தைகள் தெரிவு செய்து அவர்களை அவதானிக்கப்படும் முறை.

3. நெடுங்கோட்டாய்வு முறை - குறித்த ஒரு பிள்ளை மாத்திரம் தெரிவு செய்து பிறப்பிலிருந்து இறப்புவரை ஆய்வு செய்தல்.

**செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்**

1. மரபும் சூழ்நிலையும் - ஒரு உயிரின் விருத்தியில் மரபா? சூழலா? செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது பற்றி வாதப் பிரதி வாதங்கள் நடைபெறுகின்றது.

மரபு நிலை வாதிகள் - பெற்றோரிலிருந்து பெறுகின்ற (Gene, நிறமூர்த்தம்) மரபின் பின்புலங்கள் 40 வருடங்களுக்கு முன் sperm bank ஒன்று உருவாகியது. அங்கு பிரபல்யம். நிபுணத்தும் வாய்ந்தவர்களின் விந்து, சூல் சேகரிக்கப்பட்டு, பின்பு விரும்பிய குழந்தையை உருவாக்க முடியும்.

சூழ்நிலை வாதி - ஒருவனது சமூகம், பாடசாலையே மனிதனை விருத்தி செய்கின்றது என்கின்றனர்.

2. வயது - வயதுடன் தொடர்புடைய மாற்றங்கள் வாழ்க்கைக்காலம், ஆற்றல்களை ஆராய்வது நோக்கமாகும்.

1. உயிரியல் வயது - ஒருவரது உடற்கூறுகளின் வளர்ச்சியினை அடிப்படையாகக்கொண்டு கணிக்கப்படுவது
2. உளவியல் வயது - ஒத்த கால வயதுடையவர்களின் இசைவாக்கத்திறன்களை ஒப்பிட்டுப்பார்ப்பது
3. உள வயது - ஒத்த வயது கொண்டவர்களின் உள ஆற்றல்கள்
4. சமூக வயது - ஒருவரது சமூக வகிபங்கு
5. கல்வி வயது - கல்வித்தராதரம்
6. ஆக்கத்திறன் வயது - படைப்பாற்றல் திறன்கள்
7. கால வயது - பிறந்தது முதல் அவர் கடந்து சென்ற ஆண்டுகள்

விருத்தி உளவியல் ஆனது அனைத்து மனிதர்களும் அறிந்து இருக்க வேண்டிய உளவியற்பிரிவாக உள்ளது. மனிதனின் வாழ்க்கைக் காலம் முழுவதும் அவன் ஏதோ ஒரு வகையில் விருத்தி, வளர்ச்சி அடைந்து கொண்டிருப்பதால் விருத்தி உளவியல் பற்றிய அறிவு, தெளிவு அனைத்து மனிதர்களுக்கும் அவசியமானதாகும்.

# அறிகை உளவியல்


அறிகை (cognition) என்பது அறிவைப்பெறுதல் (acquiring) நிறுத்திவைத்திருந்தல் (retaining) பயன்படுத்தல் (using) ஆகிய உயர் உளத்தொழிற்பாடுகளைக் (High mental process) ஒரு பொதுவான பதம் ஆகும். அறிவைப்பெறுதல் (acquiring) தொடர்பாக இரு அடிப்படையான உளவியற்தொழிற்பாடுகள் கருத்திற் கொள்ளப்படும்.

1. புலக்காட்சி (perception) - இது சூழலிலுள்ள சக்திகளைக் கண்டறிந்து உயிரினால் விளக்கம் அளிக்கப்படும் செயன்முறை.
2. கற்றல் (Learning) - புதிய கருத்துக்களும் நடத்தைகளும் பெற்றுக்கொள்ளப்படும் செயன்முறை

அடுத்து, அறிவானது உயிரிக்குப் பயன்பட வேண்டுமாயின், அறிவுநிலைநிறுத்தப்பட வேண்டும். (retaining) இவ்வகையில் ஞாபகம் (memory) என்பது குறித்துச் சிந்திக்க வேண்டும். மூன்றாவதாக அறிவு பயன்படுத்தப்படும் (Using) பல்வேறு வழிகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். முக்கியமான சில பயன்பாடுகளாக சிந்தித்தலையும் நியாயித்தலையும் (Thinking and resolving) பிரச்சினை விடுவித்தலையும் தீர்மானம் மேற்கொள்ளலையும் (problem sollving and decision making) குறிப்பிடலாம். சிக்கலான நிலைமைகளை உயிரி அதிக வினைத் திறனுடன் கையாள்வதற்கு இவை பயன்படும்.

அறிவை நிலைநிறுத்திப்பயன்படுத்தவேண்டுமெனின், உள்ளக நிலையில் ஏதோ ஒரு வடிவத்தில் அது உருமாதிரி யாக்கப் படவேண்டும் (Represented) இரு வகையான பிரதிநிதித் துவப்படுத்தல்கள் பொதுவாக முன்வைக்கப்பட்டுள்ளன. முதலாவ தாக புலக்காட்சி அடிப்படையிலான வடிவம். உதாரணமாக கடந்தகால நிகழ்வகளின் கட்புல, செவிப்புல விம்பங்களை முறையே Iconic Episodic ஞாபகங்களாக நிலை நிறுத்துதல் இரண்டாவது (sementic) கூற்றுக்களாக அல்லது அர்த்தங்களாக உள்ள வடிவம். இது semestic ஞாபகம் எனப் படும். எனவே முதலாவது வகை, பருப்பொருள்நிலை (Concrete) அடிப்படையிலான தாகவும் இரண்டாவது வகை அருவ நிலை (absract) அடிப் படையானதாகவும் கொள்ளப்படுகின்றன.

இக்கருத்துக்களின் அடிப்படையில் நோக்கும்போது, அறிகை (congnition) என்பது கவனம், புலக்காட்சி, சிந்தனை, ஞாபகம், பிரச்சினை விடுவித்தல், நுண்ணறிவு, மொழி என பல் வேறு உளச்செயன்முறைகளை (mental process) உள்ளடங்குவ தாகும். அதாவது அறிகை பற்றிய கற்கை நெறியான அறிகை உளவியலானது (cognitive psychology) இந்த உளச்செயன்முறை களை விரிவாக நோக்குகின்றது.



மனிதர்கள் அறிவைப்பெற்று தமது உலக அனுபவங்களை உருவமைத்து விளங்கிக்கொள்ளப் பயன்படுத்தும் வழிமுறைகளுடன் தொடர்புடைய இந்த உயர் உளச்செயன்முறைகள் பற்றி அறிகை உளவியலாளர்கள் ஆராய்கின்றனர். பல்வேறு உளச்செயன்முறைகளினூடாக அறிவைப்பெறுதலும், நிலைநிறுத்தலும், பயன்படுத்தலும் அறிகை என்பதன் அங்கங்களாக அமைவதோடு, தகவல் பரிமாற்றம், தீர்மானம் மேற்கொள்ளல், பெற்றுக்கொண்ட அறிவைப்பிறருக்கு விளக்குதல் போன்றனவும் கூட அறிகையினுள் உள்ளடக்கப்படும். இவ்வகையில் தொடர்பு கொள்ளலும் (Communication) மொழியும் (language) அறிகையுள் அடங்குகின்றன.

அறிகை, இவ்வாறான பல உயர் உளச்செயற்பாடுகளை (Higher mental process) குறிக்கின்ற போதும், அறிகையின் மூன்று பிரதான அம்சங்களாக,

சிந்தித்தல் (thinking)
நியாயித்தல் (Reasoning)
மொழி (language)

என்பன கொள்ளப்படுகின்றன. இம்மூன்று அம்சங்களுடன் தொடர்புடையனவாக அல்லது அவற்றுள் அடங்கியிருப்பனவாக ஏனைய அம்சங்கள் உள்ளன.

## 1. சிந்தித்தல் (Thinking)

சிந்தித்தலானது உள விம்பங்களையும் (mental images) எண்ணக்கருக்களையும் (concepts) கையாளுதலை உள்ளடக்கியுள்ளது. தகவல்கள் குறித்த, உள உரு மாதிரிகளைக் (mental representaion) கையாளுகை செய்வதன் மூலம் அனுமானங்களையும் முடிவுகளையும் உய்த்துணர்வதற்கு சிந்தித்தல் அவசியமானது. எனவே, சிந்தித்தலானது உளச்செயற்பாடுகளை உள்ளடக்குவதோடு இலக்கு, நோக்கம், அல்லது முடிவு என்பவற்றை நோக்கி, அநேக சந்தர்ப்பங்களில், திசைப்படுத்தப்பட்டுமிருக்கும். நாம் எதனைக் குறித்து சிந்திக்கின்றோம் என்று நாம் பார்க்கின்றபோதே உளவிம்பங்கள் (mental image) எண்ணக்

கருக்கள் (concepts) ஆகிய இருவடிவங்களாலான உளஉரு மாதிரிகளை (mental representation) சிந்தித்தல் உள்ளடக்கியுள்ளது என்பது முக்கியத்துவம் பெறுகின்றது.

உளவிம்பம் (mental image) என்பது பொருள்கள், நிகழ்வுகள் என்பன குறித்த உளமாதிரி என வரைவிலக்கணம் கூறப்படும். சொற்களாகவோ, நிகழ்வுகளாகவோ, பார்க்கக் கூடிய பொருள்களாகவே, தொனிகள் அல்லது சத்தங் களாகவோ நாம் பெற்றுக்கொள்ளும் தகவல்கள் உளஉருமாதிரி களாக மாற்றப்பட்டு எமது உள்ளத்தில் களஞ்சியப்படுத்த படுகின்றன. இந்த உள விம்பங்கள் குறித்த சில வினாக்களுக்கு நாம் விடை காண முற்படும் போது, விடையைப்பெறுவதன் முன் இவ்விம்பங்களைக் கையாளுகை செய்ய வேண்டி ஏற்படும். இதன் பொருட்டு சிந்தித்தல் இடம்பெறும்.

உளவிம்பங்களோடு சிந்தித்தலானது எண்ணக்கருக்களின் பயன்பாட்டையும் உள்ளடக்குவதாகும். ஒத்த அம்சங்கள் அல்லது இயல்புகளின் அடிப்படையில் பொருள் களையும் நிகழ்வுகளையும் அல்லது நிலைமைகளையும் குழுவாக்குவ தற்கே உருவாக்கியுள்ள உளவகையே (mental category) எண்ணக் கரு எனப்படும். சிந்தித்தல், தொடர்பாடல் என்பவற்றுக்கான அறிகை முயற்சியை சிக்கனப்படுத்துவதற்கே எண்ணக்கருக்கள் பயன்படுத்தப்பட்டும் சிந்தித்தலைச் சிக்கனப்படுத்தி வினைத் திறனை அதிகரிக்கச் செய்யும் வகை யில் எண்ணக்கருக்களை ஒழுங்குபடுத்தும் போது பிரதான வகைகள், உபவகைகள் என்று நோக்கப்படும். இந்த எண்ணக் கருக்கள் யாவும் முறைமையான எண்ணக்கருக்கள் (Formal Concepts), இயற்கையான எண்ணக் கருக்கள் (Natural concepts) என வகைப்படுத்தியும் நோக்கப்படு கின்றன. தர்க்கவிதிகளால் அல்லது இயல்புகளின் அடிப்படையில் வரையறுக்கப்படுபவை முறைமையான எண்ணக்கருக்களாகும். நாளாந்த வாழ்க்கை அனுபவத்திலிருந்து மூலமுன் மாதிரி களைக் (Protypes) கொண்டு உருவாக்கப்படும் எண்ணக்கருக்கள் இயற்கை எண்ணக் கருக்களாகும். வகைமாதிரியான குறிப்பான எண்ணக்கரு மூலமுன் மாதிரி எனப்படும்.

**2. நியாயித்தல்** (Reasoning)

சிந்தித்தலில் தகவல்களை உளவிம்பங்களாகவும் எண்ணக் கருக்களாகவும் பெறுகின்றோம். ஆனால், இத்தகவல்களி லிருந்து நாம் முடிவுகளைப்பெறுவதற்கு நியாயித்தல் (reasoving) அவசியமாகின்றது. இவ்வாறு குறிப்பான முடிவுகளைப் பெறும் பொருட்டு பொருத்தமான தகவல்களை அறிகை உருமாற்றம் (cognitive transformation) செய்தலே நியாயித்தல் என வரைவிலக்கணம் கூறப்படும். எனவே சிந்தித்தலுடன் நியாயித்தலும் இணையும் போதே அறிகை முழுமைபெறும்.

நியாயித்தல் இரு வகையானது. முறைசார் நியாயித்தல் (Formal Reasoning) என்பது குறிப்பான எடுகூற்றிலிருந்து (premises) முடிவுகளை விடுவித்தலில் பயன்படுத்தப்படும். முறைசார் நியாயித்தலில், தேவையான எல்லாத் தகவல்களும் வழங்கப் படும். தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை நேரானதும் ஒரே ஒரு சரியான விடையை மட்டும் கொண்டதுமாகும். எனவே நாம் பிரயோகிக்கும் நியாயித்தல் ஒரு குறிப்பான முறையைப் பின்பற்றுவதாகும்.

முறைசார் நியாயித்தலுக்கு நேர்மாறான நாளாந்த நியாயித்தலானது (everyday reasoning) திட்டமிடல், உத்தரவாதம், அளித்தல், வாதங்களை மதிப்பிடல் போன்ற சிந்தித்தலை உள்ளடக்கியது. இந்நியாயித்தலில் முக்கியமான தகவல்கள் தவறவிடப்படலாம் அல்லது குறிப்பிடப்படாமல் விடப் படலாம், தரத்திலும் பயன்படுதன்மையிலும் மாறுபடக்கூடிய சாத்தியமான பலதீர்வுகளைக்கொண்டிருக்கலாம்.

எனவே முறைசார் நியாயித்தலை விட நாளாந்த நியாயித்தல் அதிக சிக்கலானதும் திட்டவட்டம் குறைந்தது மாகும். ஆனாலும் நாளாந்த நியாயித்தலே வழமையானது என்பதால் முறைசார் நியாயித்தலை விட நாளாந்த நியாயித் தலில் அதிக கவனம் வேண்டும். நியாயித்தலினூடாக நாம் பிரச்சினை விடுவித்தலை (problem Solving) மேற்கொள்கின்றோம்

3. மொழி (Language)

தகவல் பரிமாற்றத்துக்கு மொழி அவசியம். கருத்துள்ள தகவல்களை பிறர் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் பரி மாற்றம் செய்ய வேண்டுமெனின், குறியீடுகளின் பயன்பாடு மொழியில் அவசியம். இக்குறியீடுகள் ஒலிக்குறிப்புக்களா கவோ எழுதப்பட்ட சொற்களாகவோ அல்லது மெய்ப்பாடு களாகவோ அமையலாம். எதேச்சையான குறியீடுகளை இணைப்பதன் மூலம் அர்த்தமுள்ள பல கூற்றுக்களை உரு வாக்கும் தொகுதியே மொழி ஆகும். மொழியானது முக்கிய மாக ஐந்து இயல்புகளை உடையது.

1. எதேச்சையான குறியீடுகளால் மொழியின் அர்த்தங்கள் கடத்தப்படும்.
2. ஒரே மொழியைப் பேசுபவர்களால் மொழியின் அர்த்தங்கள் பகிர்ந்து கொள்ளப்படும்.
3. மொழியானது விதிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொகுதியாகும்
4. மொழி பிறப்பாக்கத்துக்குரியதாகும் (Generative)
5. மொழியானது இடமாற்றத்தை உள்ளடக்கியது

நாம் நினைவு கூர்பவற்றிலும், பிறரைப்பற்றிய எமது புலக்காட்சியிலும் தாக்கத்தை விளைவிப்பதன் மூலம் மொழியானது சிந்தித்தலில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

உளவியலில் “அறிகை” (Cognition) என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். அறிவைப்பெறுதல், நிறுத்திவைத்திருத்தல், பயன்படுத்தல் ஆகிய உயர் உளச்செயற் பாடுகளை உள்ளடக்கும் “அறிகை” பற்றிய சிந்தனைகளும் ஆய்வுகளும் முன்னெடுக்கப்படாது இருந்திருப்பின் உளவி யலில் வளர்ச்சி ஏற்பட்டிருக்க முடியாது. அறிகை என்பது பல்வேறு உயர் உளச்செயற்பாடுகளை உள்ளடக்குவதால் “அறிகை” பற்றிய கற்றலானது, அந்த உளச்செயற்பாடுகள் ஒவ்வொன்றை யும் பற்றிய கற்றலாக விரிவுபடும்.

*1960* களில் ஜெரொம் புரூனரும் ஜோர்ஜ் ஏ.மில்லரும் “அறிகைக் கற்கைகளுக்கான ஹார்வாட் நிலையம்” ஒன்றை

ஸ்தாபித்து "அறிகைப்புரட்சி ஒன்றை ஏற்படுத்தினார்கள். இதனால் எலிகளுடனும் பொறிகளுடனும் நடத்தப்பட்ட நடத்தை உளவியலாளரின் கற்கைகளை பரிசோதனை உளவியலாளர் பலர் ஏற்க மறுத்தனர். இதனால் நரம்பியல் விஞ்ஞானம், கணிதம், மானிடவியல், கணினி விஞ்ஞானம் ஆகிய துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது.

இன்று அறிகை உளவியலாளரின் முக்கிய கற்கைத்துறையாக மொழி உள்ளது. Noam chomisky, D.E.berlyne, George kelly, Herman witkin, Riley Gardner, George klein ஆகியோரது அறிகை பற்றிய கற்கைகள் முக்கியத்துவம் வாய்ந்தன.

இன்று அறிகை உளவியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துக்கு Cybernetics, கணனி விஞ்ஞானம் என்பவற்றின் உருவாக்கம் முக்கிய சாட்சியங்களாககும். தகவல் முறை வழியாக்க மாதிரிகைகள் (information & processing model) இன்று அறிகை அறிவியல் விருத்திக்கான ஒரு சான்றாகும். கணனி சார்ந்த பல்வேறு கருத்துப்படிமங்கள் அறிகை உளவியல் விருத்தி காரண மானவையாகும். Artificial interligence (செயற்கை நுண்மதி) பற்றிய ஆய்வு, மனித உள்ளம் பற்றி மேலும் கற்பதற்கு வழி வகுத்துள்ளது. அறிகைப்பொறியியல் ஆனது, விமானம், கைத்தொழில் நிலையம், ஏனைய துறைகள் போன்றவற்றில் சிக்கலான வடிவமைப்புக்களை உருவாக்கவதற்கு, மனித சிந்தனைச் செயன்முறைகள் பற்றிய அறிவைப் பிரயோகிக்க முயல்கின்றது.

இன்று நாம் எவ்வாறு சிந்திக்கின்றோம் என்பதைப் பற்றிச்சிந்திக்கும் ஆற்றலை மீ அறிகை (metacognition) என்கின்றோம். இம் மீஅறிகை பற்றிய சிந்தனையும் அறிகை உளவியலின் தற்கால விருத்தியாகும்.

ஒரு காலத்தில் அறிகை உளவியலுக்கே உரியவையாக இருந்த அறிகைச்செயன்முறைகள் இன்று பிறழ்வு உளவியல், விருத்தி உளவியல் போன்ற துறைகளில் பிரயோகிக்கப்படுவனவாக உள்ளன. அறிகைக் கண்ணோட்டம், அறிகை அணுகுமுறை ஆகிய பதங்கள் இன்று பரந்த பொருளில் அறிகை உளவியலிலும் ஏனைய முறைகளிலும் பிரயோகிக்கப்படுகின்றன.

# கல்வி உளவியல்

கல்விப்புலத்தில் உளவியல் சார் கண்டறிதல்களைப் பிரயோகித்தல் கல்வி உளவியல் எனப்படும்.

கல்வி உளவியலானது கல்வி, உளவியல் எனும் இரு வெவ்வேறு துறைகளை ஒன்றிணைக்கின்ற ஒரு பிரயோக ஒழுக்கம் (applied discipline) ஆகும்.

கல்வி உளவியல் தனித்து வளர்ச்சி பெற்ற பல பழைய துறைகளுள் ஒன்றாகும். இது நடைமுறை உளவியலின் ஒரு பகுதியேயாகும். பொது உளவியலின் கருத்துக்களையும் கண்டு பிடிப்புக்களையும் கற்பித்தலிலும் கற்றலிலும் கல்வி உளவியல் எடுத்தாளுகின்றது. அத்தோடு, கல்வி உளவியல் தனக்குத் தேவையான தகவல்களை விருத்திசார் அல்லது குழந்தை உளவியலிலிருந்து பெற்றுக்கொள்கிறது. அத்துடன் சமூக உளவியல், அசாதாரண உளவியல், உடலியல் உளவியல் போன்ற துறைகளிலிருந்தும் தகவல்களைப்பெற்று வந்தது.

கல்வி உளவியல் பிற துறைகளிலிருந்து வேறுபட்டிருக்கக்காரணம், அதனுடைய ஆய்வு முறை பற்றிய புதிய நோக்கு அன்று அதன் குறிப்பிட்ட உள்ளடக்கமே அவ்வேறுபாட்டுக்கான காரணமாகும். கல்வி உளவியலின் முக்கிய நோக்கம் உளவியல் எண்ணக்கருக்களையும் ஆய்வுமுறைகளையும் கொண்டு கற்றல் கற்பித்தல் பிரச்சினைகளை ஆராய்வதாகும். இதன் காரணமாக இத்துறையின் மையப்பொருள்

**க.பரணீதரன்**

"கற்றல்" ஆகும். கல்வி உளவியல் திறமையாக கற்றலுக்குத் தெவையான பொருத்தமான நிலைமைகளை உருவாக்க முற்படுகின்றது.

அதாவது, பள்ளிச் சூழ்நிலையினாலும் ஆசிரியர்களது செல்வாக்கினாலும் பள்ளிப்பாடத்திட்டங்களாலும் மாணவர் களின் திறன்களும் நடத்தை முறைகளும் எவ்வாறு பாதிக்கப் படுகின்றன. இவற்றை எவ்வாறு மாற்றியமைக்கலாம். அவ்வாறு செய்யின் மாணவர்களின் பல தரப்பட்ட திறன்கள் வெளிப்படுத்தப்பட்டு வளர்ச்சியுறும். மாணவர்களின் திறன் களை அவர்களுக்கும் அவர்கள் வாழும் சமூகத்திற்கும் பயன் தரும் வகையில் எவ்வாறு மாற்றி அமைக்கலாம் போன்ற விடயங்கள் கல்வி உளவியலில் ஆராயப்படுகின்றன.

எனவே இத்தகைய கல்வி உளவியலின் ஆரம்பகால வரலாற்றினை நோக்கின் *18,19* நூற்றாண்டுகளிலே Rousseau *(1712 - 1778)*, Bestalozzi *(1746 - 1827)* போன்ற சிறந்த கல்வியிய லாளர்கள் உளவியலின் அடிப்படையில் குழந்தை கல்வியை அமைத்தலின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தி உள்ளனர். ரூசொவின் காலத்திலிருந்து தான் கல்வி பற்றிய இயற்கை வாதச் சிந்தனை வளர்ச்சி கொண்டது. இச்சிந்தனை கல்வியியற் செயற்பாட்டின் ஆசிரியரையோ, பாடநூல்களையோ அல்லது பாடசாலையையோ மையமாகக்கொள்ளாது. பிள்ளைக்கு முக்கியத்துவமளித்தது. இவ்வாறான கல்வி இயற்கைவாதச் சிந்தனையை அடிப்படையாகக்கொள்ள வேண்டியதாயிற்று. ஏனெனில் இச்சிந்தனையின் படி பிள்ளையை அலட்சியம் செய்ய முடியாது.

ரூசோவோடு இணைந்து தான் பெஸ்ரலோசி, ஹெர்பட் புரபல் போன்றோர் கல்வி உளவியலில் பணிபுரிந்தனர். ரூசொவின் சிந்தனைகளை இவர்கள் நடைமுறைப்படுத்த முற்பட்டனர். குழவிப் பூங்கா இயக்கம் வளர்ச்சியடையத் தொடங்கியதும் கல்வித்துறையில் உளவியல் நன்கு நிலை பெற்றுவிட்டது. அதன் பின்னர் உளவியல் துறை பல முன்னேற்றங்களைக் கண்டது.

கல்வி உளவியலாளரான Herbart கல்வி உளவியலின் தந்தை என்றே கருதப்படுபவர். குழந்தைகளின் மனநிலை, தன்மை, விருப்பு வெறுப்புக்கள், நடத்தைக்கோலங்கள் ஆகியவை பற்றி அறிந்து கொள்ளாமல் அவர்களுக்கு கல்வி புகட்ட முயலுவதும் இயலாத காரியம் என்ற உண்மையை Herbart வலியுறுத்தினார்

இந்நூற்றாண்டில் கல்வி உளவியல் வெகுவாக முன் னேறியுள்ளது. அதன் எல்லைகளும் விரிந்துள்ளன. Thorndike, Stanly hall, Bagley, Terman, Judd, Skinner, Arthur Jersid, Arthur Gates, William Trow, Lawrence cole போன்றோரின் பெரு முயற்சிகளே கல்வி உளவிய லினை வரலாற்று ரீதியாக வளர்த்தெடுத்தவர்கள்.

ஆரம்பத்தில் கல்வி உளவியல் பொது உளவியலின் ஒரு பகுதியாகவே இருந்தது. ஆனால் இப்போது அது சிறிது தனித்தன்மை பெற்றுவிட்டது. பொது உளவியலின் கூற்றுக் களில் வகுப்பறைக்குப் பொருந்தியவைகளை மட்டுமே கல்வி உளவியல் ஏற்றுக்கொள்கின்றது. அது மட்டுமன்றி பொது உளவியலின் எல்லைக்கு அப்பாற்பட்ட பல செய்திகளிலும் கல்வி உளவியல் கவனம் செலுத்துகின்றது. உதாரணமாகப் பார்த்தால் பாடசாலையில் பாடங்களைக் கற்பிக்கும் நடை முறைகள், ஆசிரிய மாணவ உறவு, கற்றலில் மாணவர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகள், இவற்றின் காரணங்கள், இவற்றை நீக்கும் வழிகள், பிற்போக்கு மிகுதிறனோ (handicapped. Backward and gifted) உடைய குழந்தைகளுக்கான கல்வி, மாணவர்களுக்கு வழி காட்டல் ஆகியவெல்லாம் கல்வி உளநூலில் மட்டுமே யன்றிப்பொது உளவியலில் காணப்படாது. Bajn, Claparade, Thorndike போன்றோரின் நூல்களே கல்வி உளவியலின் முதன்மை நூல்களாகும்.

கல்வி உளவியல் கற்றலின் தன்மை பற்றியும் எத்தகைய நிலமைகளின் கீழ் கற்றல் நடைபெறுகின்றது என்பது பற்றியும், கற்றலை மதிப்பீடு செய்வதையும் இவ்விடம் பேசுகின்றது.

மேற்குறிப்பிட்ட வரலாற்றுப் பின்னணி கொண்ட கல்வி உளவியலின் வரைவிலக்கணங்களை நோக்குவோம்:

*1.* Skinner *(1958)*

கல்வி உளவியல், உளவியலின் ஓர் பிரிவாக இருப்ப துடன் கற்றல் - கற்பித்தல் தொடர்பாக விளக்கம் கொடுப்பதும், கையாள்வதுமான ஓர் துறையாகும். அதாவது இவரின் கருத்துப்படி உளவியலானது கல்விப்புலத்தில் பிரயோகிகப் படுவதன் மூலம் கற்றல் செயன்முறைகளை மேம்படுத்த உதவுகின்றது.

*2.* Crow & Crow

தனியன் ஒன்றின் பிறப்பிலிருந்து முதுமை வரையிலான கற்றல் அனுபவங்களை விபரிப்பதும் விளக்கம் கொடுப்பது மான உளவியல் துறையே கல்வி உளவியலாகும்.

*3.* Peel *(1956)*

கல்வி உளவியல் ஓர் விஞ்ஞானக்கல்வி ஆகும். விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி கற்றல் செயன்முறைகளை மேம்படுத்தும் ஓர் துறையாகும்.

*4.* Anderson

கல்வி உளவியல் என்பது "ஆராய்வதற்குரிய பாடமாக வும், அறிவு தரும் பரந்த பகுதியாகவும் அறிவு தேங்குமிடத்தி லிருந்து சமூக நிலை வரை விதிகளையும் கொள்கைகளையும் புகுத்தி ஆராயும் ஓர் துறையாகும்.

*5.* கல்வி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பொது உளவியலைப் பயன்படுத்துதல் கல்வி உளவியல் எனப்படும்.

### கல்வி உளவியலின் இன்றைய நிலை

உளவியலின் ஒவ்வொரு துறையும் ஆரம்ப கால வரலாற்றில் இருந்ததை விட இன்று பல வகையில் முன்னேற்றம் கண்டுள்ளன. கல்வி உளவியலும் இத்தகையதேயாகும். இன்றை அறிகைச்சூழலில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும்

ஆய்வுத்துறைகளில் ஒன்றாக கல்வி உளவியல் மேலெழுந்து வருகின்றது. கல்விநிலைப்பட்ட பிரச்சினைகள், நடை முறைகள், விளைவுகள், கருத்தியல்கள், கருத்து வினைப் பாடுகள் முதலியவற்றைக் கல்வி உளவியல் தழுவி நிற்கின்றது. கற்றல் சூழ்நிலையில் கற்போனின் நடத்தைகள் ஆய்வுக்கு உட்படுகின்றன. கற்றலையும் கற்பித்தலையும் உளவியல் நோக்கில் ஆராயும் அறிகைப் பின்புலமாகக் கல்வி உளவியல் அமைந்து வருகின்றது. கற்றல் - கற்பித்தலை வினைத்திறன் படுத்தலும் சிக்கனப்படுத்தலும் வளப்படுத்தலும் இதன் ஆய்வு வீச்சுக்குள் கொண்டு வரப்படுகின்றன. இந்நிலையில் கல்வி உளவியல் பிரயோக உளவியல் அல்லது செயல்நிலை உளவியல் என்ற நிலைக்கு உயர்த்தப்படுகின்றது.

விஞ்ஞான, தொழில்நுட்பம், கல்வி உளவியல் ஆகிய வற்றின் ஒன்றிணைப்பு மேலும் வளர்ச்சிகளை முன்னெடுத்து வருகின்றது. உளப்பகுப்பாய்வு உளவியல், நடத்தை உளவியல், அறிகை உளவியல், மானிட உளவியல்,மார்க்சிய உளவியல் முதலாம் துறைகளை அடியொற்றியே கல்வி உளவியல் செயற்பட்டு வருகின்றது.

கல்வி உளவியல் தொடர்ந்தும் தேடல்களை மேற் கொள்ளும் நடவடிக்கையை வலுப்படுத்தி வருகின்றது. கல்வி யிலே சமத்துவம், சமவாய்ப்பு, சமநோக்கு முதலியவற்றின் வற்புறுத்தல் மேலோங்கத் தொடங்க, கல்வி உளவியலின் செயற்பாடுகள் மேலும் விரிவடையத்தொடங்கின. நிராகரிக் கப்பட்டவர்கள், ஓரங்கட்டப்பட்டவர்கள், பின்னே தள்ளப் பட்டவர்கள் முதலியோருக்கு கல்வி வழங்கும் செயல்முறையை வினைத்திறன்படுத்த கல்வி உளவியல், உள்ளீடுகளை வழங்கத் தொடங்கியது.

மாணவரின் ஆளுமையைக் குறைவின்றி வளர்த்துக் கொள்வதற்கும், மாணவருக்கு இருக்க வேண்டிய அடிப்படை அறிவு - பழக்க வழக்கங்கள் என்பவற்றை வளர்த்துவிடவும், மாணவர்களுக்கு வெவ்வேறு துறைகள் பற்றிய அறிவினைப் புகட்டவும், மாணவர்கள் முழுமையான திறனை அடைவதற்

கான பயிற்சிகளை வழங்கவும், மாணவர்களுடைய மன வெழுச்சிகளை முதிர்ச்சி அடையச் செய்யவும், ஆசிரியரின் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கும், வகுப்பறையில் மாணவர் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கும், மாணவர்கள் இடையே உளரீதியாக காணப்படும் அசாதாரணங்களை கண்டறியவும், மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும், வகுப்பறையில் மாணவர் நடத்தைகளை இனங்காணவும், மாணவர்களின் மனவெழுச்சிப்பிரச்சினைகளை தீர்க்கவும், மாணவர்களுடன் சீரான உறவைப் பேணவும், சக ஆசிரியர் களுடன் சீரான உறவைப் பேணவும் உரிய ஆய்வு முடிவு களையும் முன்மொழிவுகளையும் கல்வி உளவியல் வழங்கி வருகின்றது.

எனவே தொகுத்து நோக்கின், உளவியலின் உப பிரிவுகளில் ஒன்றான கல்வி உளவியலானது உளவியலின் வரலாற்றுப் பின்னனியைக்கொண்டதாகும். கல்வி உளவியலின் வரலாற்றில் கல்வி பற்றிய சிந்தனைகள் ரூசோவின் காலத்திலேயே முளைவிடத்தொடங்கியது. அதன் பின்பு பல்வேறு கல்வியியலாளரின் கவனத்தைப் பெற்ற இத்துறை இன்று பல்வேறு வழிகளில் வரலாற்று வளர்ச்சியைக் கண்டு கொண்டிருக்கிறது.

# நலன் பேண் உளவியல்

நலன் பேண் உளவியல் என்பது உளவியல் அண்மைக் காலத்தில் பிரசித்தி பெற்ற ஓர் தனிப்பட்ட துறையாக காணப்படுகின்றது. இது ஓர் பிரயோக (Applied psychology) உளவியலாகும். உடலுக்கும் உள்ளத்துக்குமிடையிலான தொடர்பு பண்டைய காலத்திலிருந்தே அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதெனினும் 1800 களில் நெருப்புக்காய்ச்சல், சிபிலிஸ் போன்ற நோய்களின் நலன் தொடர்பான விடயங் களில் உடலியல் காரணங்கள் மட்டும் கருத்தில் கொள்ளப் பட்டதுடன், உளக்காரணிகள் அலட்சியப்படுத்தப்பட்டது.

இந்நிலமை நலன் சார்பான விடயங்களில் அண்மைக் காலம் வரை நீடித்து வந்தது. இருப்பினும் நலன் பேண் உளவிய லாளர்கள் மருத்துவர்களிடம் ஏனைய நலன் பேண் உத்தி யோகத்தர்களும் இணைந்து தொழிற்படவும் ஆய்வுகள் மூலம் கிடைத்த அனுபவங்களை பிரயோகிக்க ஏற்பட்ட போது நலன் பேண் உளவியல் தனித்த அந்தஸ்தினை பெற்றுக் கொண்டது.

நலன்பேண் உளவியல் ஓர் விசேடமான துறை. இது உயிரியல் (Biology) உளவியல் (Psychology) நடத்தை சார் காரணிகள் எவ்வாறு நலத்துடனும் (Health) நோய்களுடனும் (illness) எவ் வாறு செல்வாக்குச் செலுத்துகிறது என்பது பற்றி நோக்குகிறது.

இவ் உளவியலானது Clinical psychology, Behavioural Medicine (நடத்தை மருத்துவம்) போன்ற துறைகளுடன் உள்ளார்ந்த

**க.பரணீதரன்**

நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது.

இத்துறையானது மக்களின் நலத்தை மேம்படுத்துவது மட்டுமன்றி நோய் வராமல் தடுத்தல், நோய்க்கு சிகிச்சை அளித்தல் என்பவற்றில் கவனம் செலுத்துவதுடன் மக்கள் நோய் வாய்ப்படுகின்ற போது எவ்வாறு துலங்குகின்றனர். எவ்வாறு தம் நோயைக் கையாளுகின்றனர் மற்றும் அதிலிருந்து மீண்டு வருவதற்கு செய்யும் உத்திகள் என்பதிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அது மட்டுமன்றி மக்களின் அன்றாட வாழ்க்கை முறைமைகள், நடத்தைகள், மனவெழுச்சிக்குத் துலங்கும் பாங்கு, சம்பவங்களை வியாக்கியானம் செய்தல், ஆளுமைக்குறைபாடுகள், உளரீதியான சுகாதார நிலமைகள் என்பன உடல் நலத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்து கின்றதென ஆராய்கின்றது.

Definition

உள நடத்தைக்கும் உடல் நலம் நோய் நிலமை களுக்கிடையிலான தொடர்பை ஆராய்வது, நலத்தையும் நோய் தடுத்தலையும் தொடர்புபடுத்தும் உளவியல் துறை நலன்பேண் உளவியலாகும்.

Matarzo

ஆரோக்கியத்தை மேலும் உயர்த்தவும், பேணிக் கொள்ளவும் நோய் வராமல் தடுப்பதற்கும், சிகிச்சையளிப்ப தற்கும் ஆரோக்கியம் மற்றும் உடற்தொழிற்பாடு குறைவதற் கான காரணியை அடையாளப்படுத்தவும் நோய் வராமல் நிர்ணயப்படுத்தல்

நலன் பாதுகாப்பு, நலம்சார் கொள்கைகள் ஆகியவற்றை உருவாக்கல் போன்ற எல்லாவிதமான நலச்செயற்பாடுகளுக் கான கல்வி ரீதியான தொழில், விஞ்ஞான ரீதியான உளவியல் சேர்க்கை முறைமையே நலன்பேண் உளவியலாகும். உதாரணம்:

1. டெங்கு நுளம்பு ஒழிப்பு
2. மோட்டார்சைக்கிளில் செல்லும்போது தலைக்கவசம் அணிதல்

ஒவ்வொரு நலன் பேண் அமைப்பும் இணையத்தளமும் நலன்பேண் தொடர்பான புத்தகங்களும், உளவியலாளர்களும் Matarzo வின் இவ் வரைவிலக்கணத்தை எந்தவித விமர்சனமோ விவாதமோ இன்றி ஏற்றுக்கொள்வர்.நலன்பேண் ஆய்வாளர் களின் கருத்தின்படி இவ்வரை விலக்கணம் மிகச்சரியானதாக வும் குறித்த துறைக்கேற்ப விரிவானதாகவும் எந்தவித பிரச்சினையும் கொண்டிருக்க வில்லை என்கின்றன.

நலன்பேண் உளவியல் தொடர்பான வரைவிலக்கணங் களை நோக்குகின்ற போது நலன் சார் ஆய்வுகள், உடல் நோய்கள், உளவியல் கொள்கைகள் நலத்திட்டங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

## நலன் பேண் உளவியலின் ஆய்வு முறைகள்


நலன்பேண் உளவியலானது சமூக விஞ்ஞான ஆய்வு முறைகளை தன்னத்தே கொண்டுள்ளது. அம்முறைகளுள் குறிப்பான கட்டுப்படுத்தப்பட்ட மாதிரிப்பரிசோதனைகளாக,


1. கட்டுப்படுத்தப்பட்ட மாதிரிப்பரிசோதனை
2. நெடுங்கோட்டாய்வு முறை
3. குறுக்குவெட்டாய்வு முறை
4. சம்பவ கற்கை ஆய்வு முறை என்பன விளங்குகின்றன

## நலன் பேண் உளவியலின் நோக்கம்

1. நலத்தைப் பாதிக்கின்ற நடத்தை, நலம் தொடர்பான எண்ணக்கருக்களை விளங்கிக்கொள்ளல்
2. நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாத்தல்
3. நலம் தொடர்பான திட்டங்களை பகுப்பாய்வுக்கு உட்படுத்தல்
4. நலம் தொடர்பான மக்களிற்கு விழிப்புணர்வூட்டல்

நலன்பேண் உளவியலை சரியான வகையில் கற்று அறிந்த மனிதன் நோய்களில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடியவனாகவும் நலமான வாழ்வை ஒழுக்கத்துடன் வாழக் கூடியவனாகவும் திகழ்வான்.





"He that has eyes to see and ears to hear may convince himself that no mortal can keep a secret. If his lips are silent, he chatters with his fingertips; betrayal oozes out of him at every pore."

Sigmund Freud